Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 8, 2022

வெள்ளிக்கிழமை, 08 ஜூலை 2022 | ஒளி: 08 கதிர்: 043 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## இந்த மிளகாய் கடும் காரம்



■ சுதத் எச்.எம்.ஹேவா

'மூட்டை கொச்சிக்காய்' என்று அழைக்கப்படும் கடும் காரமான மிளகாய் வகைகளில் ஒன்றான இந்த மிளகாயின் விலையும் தலை சுற்றும் வகையில் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



அடுத்த சில மாதங்களில்

# 70% பணவீக்கம் உயரும்

### குறைந்த வருமானத்தை பெறுவோர் பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்

■ ஆர்.யசி

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளில் அடுத்த சில மாதங்களில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள விலை உயர்வுகளுடன் நாட்டின் முதன்மைப் பணவீக்கமானது 70 சதவீதமளவு உயர்வடையும் எனவும், குறைந்த வருமானங்களை பெறும் மக்கள், அதிகமாக பாதிக்கப்படப்போகின்றனர் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வரிசையில் சுக பிரசவம்



பத்தரமுல்லை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருந்த நிலையில் கர்ப்பிணித் தாய்யொருவர் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

வழக்கு விசாரணை நிறைவடையும்வரை

## ஐ.எம்.எப் உதவி செய்யாது

■ பா.நிரோஸ்

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நிறைவடையும் வரையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக் கொள்வதில் பிரச்சினை என எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியல்ல எம்.பி தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், பிணைமுறி விவகாரம்

தொடர்ச்சி P2

அரசாங்கம் முன்மொழிந்த திட்டத்தை

## ஐ.எம்.எப் ஏற்றது

■ ஆர்.யசி

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இலங்கையின் முன்மொழிந்த திட்டத்தை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "கோட்டா நீ போப்பா"

### சனியன்று தோட்டங்கள், வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் பணிபகிஷ்கரிப்பில்



சனிக்கிழமை ஒன்பதாம் திகதி கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி நகர்வது, சுற்றி வளைப்பது, நாடெங்கும் தமது ஊர்களில் தெருக்களுக்கு வந்து அமைதியான முறையில் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என எதிர்கட்சிகள், காலிமுக போராளிகள், சிவில் சமூகத்தினர் ஆகியோருக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



அடுத்தடுத்த ராஜினாமாக்கள், அமைச்சர்களின் அழுத்தங்கள்:

## பதவி விலகுகிறார் பிரிட்டன் பிரதமர்

அடுத்தடுத்த ராஜினாமாக்கள், அமைச்சர்களின் அழுத்தங்கள் ஆகியவற்றின் எதிரொலியாக, பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் விரைவில் பதவி விலக முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு நெருங்கிய வட்டாரம் இது குறித்து கூறுகையில், "கடந்த 48 மணி நேரத்தில் பிரிட்டன் ஆளுங்கட்சியில் நடந்துவரும் நிகழ்வுகளைக் கண்டு 'எதிர்த்துப் போராடுவேன்' என்று போரிஸ் கூறினார்.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு வந்துள்ள இரு ரஷ்ய பிரதிநிதிகள்

ரஷ்யாவின் இரண்டு எரிபொருள் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இருவர், நேற்று (07) இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இரு பிரதிநிதிகளும் நேற்று காலை நாட்டை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை தற்போது எதிர்கொள்ளும் எரிபொருள் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில், எரிபொருள் இறக்குமதி தொடர்பில்

தொடர்ச்சி P2






## "நீதி வேண்டும்"

### பேராயர், அமெரிக்க தூதுவரிடம் தெரிவிப்பு

பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டிருந்தார். ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க தன்னாலான முயற்சிகளை தான் முன்னெடுத்து வருவதாகவும், சர்வமத ஒத்துழைப்புகளை நாட்டில் உருவாக்குவது குறித்தும் பேராயர்

தொடர்ச்சி P2



யாழில்

## வெதுப்பகங்கள் அணைந்துவிடும்

■ நிதர்சன் வினோத்


எதிர்வரும் திங்கட்கிழமை (11) முதல் பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளை தொடர்ந்து உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## இலங்கையின் தரவுகள் பொய்யானவை

### கூறுகின்றார் ஸ்டீவ் ஹாங்க்; மறுக்கின்றது மத்திய வங்கி

■ ஆர்.யசி





இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், தற்போதுள்ள நிலைமையில் இலங்கையின் முதன்மை பணவீக்கம் 54.6 சதவீதம் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. எனினும் இந்தத் தரவுகள் தவறானவை எனவும் இலங்கையின் உண்மையான பணவீக்க சதவீதமானது 113.16 என துல்லியமாக கணிக்க முடிந்துள்ளதாக

தொடர்ச்சி P2

## 6.26 மில்லியன் மக்களுக்கு கடும் உணவுப் பற்றாக்குறை

இலங்கையில் 6.26 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என உலக உணவுதிட்டம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## '09 சனி'க்கு முழு ஆதரவு

### விளம்பரங்களைத் தேடோம் என்கிறது சஜித் அணி

■ பா.நிரோஸ்

ஜனாதிபதிக்கு எதிராக நாளை (09) நடைபெறும் போராட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழு ஆதரவையும் வழங்கும் என தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, தனிப்பட்ட கட்சியின் நிகழ்ச்சி நிரலையோ அல்லது கட்சிக்கான விளம்பரங்களையோ இந்தப் போராட்டத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்காது, தங்களது ஆதரவை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## போராட்டத்தை வென்றெடுக்க ஒன்றிணைந்த பிரகடனம்

'போராட்டத்தை வென்றெடுக்கும் பிரகடனம்' எனும் தொனிப்பொருளில் சர்வகட்சி செயற்பாட்டாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த மாநாட்டின் பிரகடன வெளியீட்டு நிகழ்வு, கொழும்பு ரமடா ஹோட்டலில் புதன்கிழமை (06) இடம்பெற்றது.

போராட்டத்தை வெல்லும் பிரகடனம், ஆறு சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியுள்ளதோடு, இதன் வெற்றிக்காக சர்வ கட்சிப் போராளிகள் தம்மை அர்ப்பணிப்பதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## 'ஜெனி'களும் வரிசைக்கு வந்தன

■ சுதத் எச்.எம். ஹேவா



நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடியை அடுத்து, எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு முன்பாக ஒவ்வொருநாளும் வாகனங்கள் வரிசையில் நிற்கின்றன.

வரிசைகள் நீண்டுகொண்டே செல்கின்றன. இந்நிலையில், அந்த வரிசையில், மின் பிறப்பாக்கி (ஜெனரேட்டர்களும்) வரிசையில் வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 70% பணவீக்கம் உயரும்

மத்திய வங்கியினால் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்,

இந்த ஆண்டின் முதன்மைப் பணவீக்கம் மே மாதத்தில் 50 வீதத்தை தாண்டியுள்ளது. அடுத்த சில மாதங்களில் பணவீக்கம் 70 சதவீதமளவிற்கு உயர்வடையும். அடுத்த சில மாதங்களில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள விலை உயர்வுகளுடன் ஒப்பிடுகையில் இந்த நிலைமை ஏற்படும். இப்போது உயர்வடைந்துள்ள பணவீக்கம் மற்றும் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கவுள்ள பணவீக்கம் காரணமாக குறைந்த வருமானங்களை பெற்றுக்கொள்ளும் மக்களே அதிகமாக பாதிக்கப்படப்போகின்றனர்.

தற்போதைய பணவீக்கம் மிக உச்சமடைந்து 100 வீதத்தை வெளிப்படுத்தினால் நடுத்தர வர்க்க எந்தவொரு வர்த்தக நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாதுபோகும். முழுமையாக வீழ்ச்சியடையும். ஆகவே இதனை தவிர்க்க பண வீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். அதற்காகவே வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான பொருளாதார நெருக்கடியின் போது நிதி முகாமைத்துவதை மத்திய வங்கியினால் மாத்திரம் கையாள முடியாது. ஏனைய அரச நிதி கொள்கையும், அரச நிறுவனங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும், அவசியமான மாற்றங்களை செய்தாக வேண்டும். எம்மாலான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். புதிய வரி அதிகரிப்புகளை செய்துள்ளோம். ஆனால் இதற்கான விளைவுகள் உடனே கிடைக்கப்போவதில்லை. அதற்கு சிறிது காலம் செல்லும். இதே நிலைமையில் பயணித்தால் மீண்டும் பணம் அச்சடிக்க வேண்டிய நிலைமையே ஏற்படும். ஆகவே துறைகளும் துரிதமாக செயற்பட வேண்டும்.

எனினும் ஏற்றுமதி -இறக்குமதிக்கு இடையில் சமநிலை தன்மை ஒன்று வெளிப்படுகின்றது. இது சற்று ஆரோக்கியமான நிலைமையாகவும். இந்த நெருக்கடியிலும் சில நல்ல மாற்றங்களும் இடம்பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால் பல்வேறு துறைகளிலும் இந்த மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இல்லையேல் மிக மோசமான நிலையொன்றுக்கு முகங்கொடுக்க நேரிடும். ஆனால் இந்தியா சீனா ஆகிய நாடுகளிடம் இருந்து உதவிகள் கிடைத்தால் சற்று ஆறுதலான நிலைமைகள் உருவாக்கவும். அது குறித்தும் பேச்சுவார்த்தைகள் முன்னேட்டுக்கப்படுகின்றது.

இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்கவிலலை என்றால், அரசாங்கத்தினால் வருமானத்தை அதிகரிக்க முடியவில்லை என்றால் மறுபக்கம் செலவுகளை குறைத்தாக வேண்டும். கடன்களை கைவிட வேண்டும். அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைக்கும் பட்சத்தில் நாட்டின் ஸ்திரத்ததன்மையை உறுதிப்படுத்த முடியும். அவ்வாறான முயற்சிகளையே நாம் முன்னெடுத்து வருகின்றோம் என்றார்.

# இந்த மிளகாய் கடும் காரம்

ஹட்டன் நகரத்தில் இந்த மிளகாய் ஒரு கிலோகிராம், 2,000 ரூபாய் முதல் 2,300 ரூபாய் வரையிலும் விற்பனைச்செய்யப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 900 ரூபாய் முதல் 1,300 ரூபாய்வரையிலும் விற்பனைச் செய்யப்படுகின்றது.

மிளகாய்களின் விலைகள் கடுமையாக அதிகரிக்கப்பட்டதை அடுத்து, அறுவடைக்கு நாட்கள் இருக்கும் முன்னரே, விவசாயிகள் மிளகாய்களை ஆய்ந்து சந்தைக்கு கொண்டுவருதல் அதிகரித்துள்ளது.

# வரிசையில் சுக பிரசவம்

குறித்த தாய் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள வரிசையில் நின்றுகொண்டிருந்த வேளையில் பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து, அங்கிருந்த இராணுவத்தினரால் பொரளை - காசல்வீதி பெண்கள் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லும் வழியில் அவர் குழந்தையை பிரசவித்துள்ளார்.

ஹட்டன் பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய தாயும் அவரது குழந்தையும் பொரளை காசல்வீதி மகளிர் வைத்தியசாலையில் நலமுடன் இருப்பதாக குடிவரவு குடியகழ்வு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்பெண், இரண்டு நாட்களாக வரிசையில் காத்திருந்துள்ளார். நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வருகை தந்துள்ள மக்கள் நேற்றும்(07) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

# ஐ.எம்.எப் உதவி செய்யாது

தொடர்பில் அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ராஜபக்ஷக்கள் மூவரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை வெவ்வேறு நாடுகளில் சொத்துக்களாக ராஜபக்ஷக்கள் சேர்த்து வைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை நிறைவடையும் வரையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குவதில் பிரச்சனை காணப்படுவதாகவும் லக்ஷ்மன் கிரியல்ல கூறினார்.

வெனிசுலாவிலும் இதே போன்ற பிரச்சினை ஒன்று ஏற்பட்டதாகவும் இதனால் சர்வதேச நாணய நிதியம் அவர்களுக்கு வழங்க வேண்டிய உதவிகளை பல ஆண்டுகளாக நிராகரித்து வந்ததாகவும் சுட்டிக்காட்டினார். நாட்டில் ஜனநாயகத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதுபோல இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளதாகவும் கூறினார்.

சர்வதேசத்தின் உதவிகளைப் பெற வேண்டுமென்றால் சர்வதேசத்துடன் சுமூகமான உறவு காணப்பட வேண்டும் எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கும் சர்வதேசத்திற்கும் சுமூகமான உறவு இல்லை. குறிப்பாக ஜனாதிபதி பதவியேற்று 6 மாதங்களுக்குள்ளேயே இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்றை சர்வதேச நாடுகள் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் கொண்டு வந்தது. வழமையாக இலங்கைக்கு ஆதரவளிக்கும் இஸ்லாமிய நாடுகள் கூட இந்த பிரேரணைக்கு ஆதரவளிக்கவில்லை என்றார்.

# ஐ.எம்.எப் ஏற்றது

நிதி அமைச்சு நேற்றும் (நேற்று முன்தினம்) சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தது, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும். இப்போதும் பேச்சுவார்த்தைகள் நிறைவடையும் மட்டத்திற்கு வந்துள்ளது. விரைவில் இணக்கம் காணப்படும் . கொள்கை திட்டம் குறித்த பேச்சுக்கள் அடுத்ததாக ஆரம்பிக்கப்படும். அதேபோல் விரைவில் உடன்படிக்கைக்கு வர முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய வங்கியின் சுயாதீனம், சட்டம் ஒழுங்கு உறுதிப்பாடு மற்றும் ஊழல் செயற்பாடுகளை நிறுத்துவது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க செனட் கூறிய விடயங்களாக இருந்தாலும் சர்வதேச நாணய நிதியம் இது குறித்து முரண்பாடுகளை ஏற்படுத்தவில்லை. ஆகவே இதில் பிரச்சினைகள் ஏற்படப்போவதில்லை.

கடன் மீள் கட்டமைப்பு குறித்தும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது, ஆரம்பகட்ட பேச்சுகளாக இவை அமைந்துள்ளன. எனினும் பணியாளர் மட்ட பேச்சுவார்த்தைகள் முடுவுக்கு வந்த பின்னர் அடுத்தகட்டமாக இவற்றில் கவனம் செலுத்தப்படும். ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

# “கோட்டா நீ போப்பா”

இக்கூட்டத்தில் எதிரணி கட்சிகள் சார்பில் கலந்துக்கொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்கு கூறியதாவது,

9ம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ள முழு அடைப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி முழுமையாக பங்கு பெறும். இதன்படி மலையக தோட்டங்களில் அன்றைய தினம் பணிகளில் ஈடுபடாமல், அமைதியான முறையில் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படி மலையக தோட்ட தொழிலாளர்கள் மற்றும் தோட்ட வதிவாளர்களை தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் கோருகிறோம்.

அதேபோல கொழும்பு உட்பட நகரங்களில் வர்த்தக நிலையங்களையும், அலுவலகங்களையும் மூடி, முழுமையாக அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படியும், தமது வேலைத்தள பணியாளர்களையும், அரசு எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துக்கொள்ள இடமளிக்கும்படியும் அனைத்து தரப்பினரையும் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் கோருகிறோம் என்றார்.

# வெதுப்பகங்கள் அணைந்துவிடும்

இயற்கை அனர்த்தங்கள் உருவாகும் போது எமது உதவியை மாவட்ட செயலகத்தினர் எதிர்பார்க்கின்றனர். ஆனால், தற்போது எம்மை கைவிட்டுள்ளனர்.

நாம் எமக்கு டீசலை பெற்று தரக்கோரி பல தடவை கோரிக்கை விடுத்தும் அதற்கு யாரும் செவிசாய்க்கவில்லை.

இந்த நிலையில் தொடர்ந்து நம்மால் வெதுப்பாக உற்பத்திகளை செய்ய முடியாது. கறுப்புச் சந்தையில் டீசலைப் பெற்று மக்களுக்கு வெதுப்பக உற்பத்திகளை வழங்க முடியாது.

இறுதியாக நாம் டீசலை பெற்றுதரக்கோரி இராணுவத்தினரின் உதவியை நாடவிருக்கின்றோம் என்றார்.

# பதவி விலகுகிறார் பிரிட்டன் பிரதமர்

ஆனால், இப்போது அவரே தான் பதவி விலக வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறியுள்ளார். அவர் ஒக்டோபர் மாதம் வரை கேர்டேக்கர் பிரதமராக நீடிப்பார். கன்சர்வேட்டிவ் கட்சியின் வருடாந்திர கூட்டத்திற்காக புதிய தலைவர் தேர்வாகும் வரை அவர் பிரதமராக பொறுப்பு வகிப்பார்” என்று தெரிவித்துள்ளது.

பதவி விலகல் தொடர்பாக இன்றைக்கே போரிஸ் ஜான்சன் முக்கிய அறிவிப்பை வெளியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் நாட்டை வழிநடத்துவார் என்று தங்களுக்கு நம்பிக்கையில்லை எனக் கூறி அந்நாட்டின் நிதியமைச்சர் ரிஷி சுனக், சுகாதார அமைச்சர் ஷாஜித் ஜாவேத் ஆகியோர் பதவி விலகினர்.

இதனையடுத்து நாட்டின் புதிய நிதியமைச்சராக நதீம் ஜஹாவி நியமிக்கப்பட்டார். ஆனால் ஜவாஹியும் பிரதமர் பக்கம் நிற்கவில்லை. அவர் ஒரு நீண்ட கடிதத்தை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்தார்.

“பிரதமர் அவர்களே... நீங்கள் பிரதமராக இருப்பது நீடிக்கப்போவதில்லை. இது இன்னும் மோசமாகவே செய்யும். தனிப்பட்ட முறையில் உங்களுக்கும், கட்சிக்கும், ஒட்டுமொத்த தேசத்திற்கும் இது சங்கடத்தையே தரும். ஆகையால் இந்த தருணத்தில் நீங்கள் சரியான முடிவை எடுக்க வேண்டும். நீங்கள் ராஜினாமா செய்தே ஆக வேண்டும்” என்பதே அந்தக் கடிதத்தின் சாராம்சம்.

கொரோனா ஊரடங்குக்கு இடையே பிறந்த நாள் விருந்து நடத்தி சர்ச்சையில் சிக்கினார் போரிஸ் ஜான்சன. ஜூன் 2020-இல் அவருக்கு பொலிஸார் அபராதம் விதித்தனர். இதன்மூலம், பிரிட்டனின் பிரதமராக ஆட்சியில் உள்ள ஒருவர் மீது சட்டத்தை மீறியதாக அபராதம் விதிக்கப்படும் முதல் பிரதமராக அவர் ஆனார்.

இதுவே அவர் மீது சொந்த கட்சியில் எதிர்ப்பு கிளம்ப காரணமாகியது.

இது ஒருபுறம் இருக்க, போரிஸ் ஜான்சன் வரி உயர்வை அமல்படுத்தினார். இதன் மீதும் கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த எம்.பிக்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

கடந்த மாதம் போரிஸ் ஜான்சனுக்கு எதிராக நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. அதில் போரிஸ் ஜான்சனின் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த மொத்தம் உள்ள 359 எம்.பிக்களில், 211 எம்.பி.க்கள் போரிஸ் ஜான்சனுக்கு ஆதரவாகவும் 148 எம்.பிக்கள் அவருக்கு எதிராகவும் வாக்களித்தனர். அப்போதே அவரது தலைமை ஆட்டம் கண்டதும் உறுதியாகிவிட்டது.

# இலங்கையின் தரவுகள் பொய்யானவை

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹாங்க் தெரிவித்துள்ளார். இலங்கை தற்போது அறிவித்துள்ள பண வீக்கத்தை விடவும் இரண்டு மடங்கு அதிகமாகவே இலங்கையின் தற்போதைய முதன்மை பணவீக்கம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இதனை மறுத்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர், உலகமே ஏற்றுக்கொண்டுள்ள முறைமைக்கு அமையவே நாம் நாட்டின் பண வீக்கத்தை அளவிடுகின்றோம். அதற்கமைய இலங்கை தற்போது 54.6 வீதமாக பதிவாகின்றது. ஸ்டீவ் ஹாங்க் எவ்வாறு இதனை கணித்தார் என தெரியவில்லை. எவ்வாறு மதிப்பீடு செய்தார் என்பதை அவர் கூற வேண்டும். பொதுவாக அவரது கணிப்பு குறித்து எம்மிடத்தில் இணக்கப்பாடு இல்லை. அதனை எம்மால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது என தெரிவித்தார்.

# இலங்கைக்கு வந்துள்ள இரு ரஷ்ய பிரதிநிதிகள்

எரிபொருள் நிறுவன பிரதிநிதிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவின் மொஸ்கோவிற்கும் கட்டுநாயக்கவிற்கும் இடையிலான நேரடி விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் பஹ்ரைன் ஊடாக நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன், இவர்களை வரவேற்க தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச உள்ளிட்டோர் பிரசன்னமாகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ‘ஜெனி’களும் வரிசைக்கு வந்தன

சுமார் 1 கிலோ மீற்றர் தூரத்துக்கு இவ்வாறு ஜெனரேட்டர்கள் வரிசையில் வைக்கப்பட்டிருந்தன. ஹட்டன் நகரிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்குக்கான வரிசையிலேயே இவை வைக்கப்பட்டிருந்தன.

# 9 சனிக்கு முழு ஆதரவு

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (7) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்து தெரிவித்த அவர், ராஜபக்ஷர்களை ரணில் பாதுகாத்தார். எனினும், தற்போது ரணிலை பிரதமர் பதவியில் இருந்து அகற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை பசில் ராஜபக்ஷவை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

இன்னும் இரு வாரங்களில் இந்த அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்ற போவதாகவும் ஜனாதிபதி மாளிகை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது சேற்று தண்ணீரை வீசி அடித்ததோடு, அதிகளவான கண்ணீர் புகை பிரயோகமும் 6ஆம் திகதி புதன்கிழமையே மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதன்போது போராட்டத்தில் கலந்துகொண்ட தனக்கும் கால்கள் இரண்டிலும் காயம் படுமளவுக்கு நீர்த்தாரை பிரயோகம், கண்ணீர் புகை பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஹிருணிக்கா மீது புதுவிதமான பயம் காணப்படுகிறது. ஹிருனிகாவை பார்த்தாலே ஜனாதிபதி பயந்து ஓடுகிறார். நாட்டில் உள்ள அனைத்து மக்களும் அனாதரவாகியுள்ளனர். ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷ மீதான நம்பிக்கை ஒட்டுமொத்த நாட்டு மக்களிடமும் தற்போது இல்லை. எனவே ஜனாதிபதி பதவியில் கோட்டா இருக்கும் வரையில் எந்த அர்ப்பணிப்பையும் செய்ய மக்கள் தயாராக இல்லை. அதுபோல நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாது சர்வதேசமோ அல்லது சர்வதேச நாணய நீதியமோ ஒருபோதும் இலங்கைக்கு உதவப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

மாநாயக தேரர்கள், கார்டினல், நாட்டில் உள்ள புத்திஜீவிகள் என அனைவரும் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றையே வலியுறுத்தி வருகிறார்கள். எனினும் இந்த சர்வ கட்சி அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமாரர் திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இணைந்து கொள்ளவில்லை என்றால் அல்லது நிராகரிக்குமாக இருந்தால் அது பாரிய பிரச்சனையாகி விடும் எனவும் தெரிவித்தார்.

# நீதி வேண்டும்

இதன்போது, அனைத்து இலங்கையர்களும் அமைதியாக வழிபடுவதற்கான உரிமையை அமெரிக்கா ஆதரிக்கிறது எனவும், ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெறுவதற்கான பேராயர் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கும், இலங்கையில் சர்வமத ஒற்றுமையை அமெரிக்கா எவ்வாறு தொடர்ந்து ஆதரிக்கலாம் என்பது குறித்த பேராயரின் பார்வையைப் பகிர்ந்ததற்கும், மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதாக அமெரிக்க தூதுவர் தெரிவித்துளார்.

# போராட்டத்தை வென்றெடுக்க ஒன்றிணைந்த பிரகடனம்

நாட்டில் ஜனநாயகம் மேலோங்கும் ஆட்சியை நிறுவி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக முன்னெடுக்கப்படும் போராளிகளின் முயற்சிகளை பாராட்டுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதன் ஜனநாயக ரீதியிலான அனைத்து கோரிக்கைகளுக்கும் மாற்றுக் கருத்து இன்றி தான் உடன்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் என்பது ஜனாதிபதி மட்டுமல்ல என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அவரது நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்துக்கும் நீண்டு செல்வதாகவும் அவர் தெரிவித்தார். எனவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை நீக்குவது தொடர்பில் தமக்கு நிலையான ஒரு கருத்து இருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், போராட்டத்தில் ஈடுபடும் அனைத்து குழுக்களும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்பும் பயணத்திற்கு பங்களிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 6.26 மில்லியன் மக்களுக்கு கடும் உணவுப் பற்றாக்குறை

தெரிவித்துள்ளது.இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையிலான உணவு நெருக்கடியின் சுமையை இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ளனர் எனவும், பத்தில் மூன்று குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள 6.2 மில்லியன் மக்களில் 65,600 மக்கள் மிகமோசமான உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் எனவும், 2022 ஆண்டு ஜூன் மாதம் இலங்கையின் உணவுப்பணவீக்கம் 57.4 வீதமாக காணப்பட்டது உணவுப்பொருட்களின்

விலை அதிகரிப்பு போதுமான ஊட்டச்சத்து மிக்க உணவுகளை பெறுவதற்கான மக்களின் திறனை மோசமாக பாதித்துள்ளது. ஐந்தில் இரண்டு குடும்பங்கள் போதுமான அளவு உணவுகளை உண்பதில்லை எனவும், மலையகத்தில் உணவுபாதுகாப்பு நிலை மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், மலையகத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட வீடுகள் உணவுப்பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்கு

# நிதியொதுக்கீடு செய்வதில் சிக்கல்

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்**

பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடாக, நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்படமாட்டாதென தெரிவித்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தற்காலிகமாக நிறுத்துமாறும், தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களை நஷ்டம் ஏற்படாத வகையில் தற்காலிகமாக நிறுத்துமாறும் திறைசேரி அறிவித்துள்ளது என்றார்.

எவ்வாறாயினும், குறைநிரப்பு மதிப்பீட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னரே அதனை சரியாகக் கூற முடியும் என்றார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.

கொழும்பு வடக்கு பர்க்கியூசன் வீதியிலுள்ள நஜீமா தோட்டத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. இந்தக் காணி 2006 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் மக்களை தற்காலிகமாக குடியேற்றப் பயன்படுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கர்ப்பிணி அரச ஊழியர்கள் தொடர்பில்

# சிறப்பு கவனம் செலுத்துங்கள்

**பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் கோரிக்கை**



நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கும் கர்ப்பிணி அரச உத்தியோகத்தர்களை, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள வேறொரு சேவை நிலையத்திற்கு பணிக்கு நியமிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் கர்ப்பிணி உத்தியோகத்தர்கள் அவ்வாறு நியமிப்பதில் ஏதேனும் இடையூறுகள் காணப்படுமாயின் தமது கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வீட்டிலிருந்தே இணையவழியில் தமது கடமைகளை செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தவிசாளர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே குறித்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைப்பதை கட்டுப்படுத்துவது தொடர்பில் 17.06.2022 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 16/2022 பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்டது. இதன்படி, குறித்த சுற்றறிக்கையின் 02ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வசிப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள வேறு சேவை நிலையத்திற்கு அரச உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்தப்படுவது தொடர்பில் கர்ப்பிணி அரச உத்தியோகத்தர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், அவ்விடயம் தொடர்பில் தனியார் துறையினருக்கும் பிரயோகித்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தவிசாளர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே விடுத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்து செயற்படால்

# இரு வருடங்களுக்குள் முழுமையாக மீளலாம்

**மொட்டு எம்.பி நம்பிக்கை**

நூருல் ஹுதா உமர்



அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலமாக அடுத்த இரு வருடங்களுக்கு இடையில் கஷ்ட நிலைமையில் இருந்து முழுமையாக மீள முடியுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆலையடிவேம்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, மக்கள் மத்தியில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இது நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் கஷ்டமான காலம்தான். இந்நிலைமைக்கு அரசாங்கத்தின் மீது பழியை போட்டு, குறை கூறி கொண்டே இருப்பதால் எந்தத் தீர்வும் வானத்தில் இருந்து வந்து விட போவதில்லை.

"ஆனால், அனைவரும் ஒன்றுபட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் முழுமையாக மீட்சி பெறலாம். "விரைவில் யூரியா உரம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கப்படும். இதில் எந்தவித முறைகேடுகளும் இடம்பெற கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். ஏதேனும் முறைகேடுகள் இடம்பெறுகின்ற பட்சத்தில் அதிகாரிகளுக்கும் எமக்கும் பொதுமக்கள் முறைப்பாடு செய்ய முடியும்.

> **அனைவரும் ஒன்றுபட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் முழுமையாக மீட்சி பெறலாம்**

"எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை உண்மையிலேயே பெருங்கவலை தருகின்றது. என் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட எரிபொருள் நெருக்கடிக்கு உட்பட்டுள்ளார்கள். ஆனால், கூடுமான விரைவில் எரிபொருள் நெருக்கடிக்கும் தீர்வு எட்டப்படும்.

"அதே போல அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதற்கும் உரிய தீர்வு பெற்று தரப்படும்" என்றார்.

ரணிலிடமிருந்து

# இன்று நிதி அமைச்சு; நாளை பிரதமர் பதவி

பா.நிரோஸ்



பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான கலந்துரையாடல்களில் ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட்டு வருவதாக அதன் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மனோ, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பிரச்சினைகள் இருக்கிறதா? நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இருக்கின்றனவா? ஏன் இரு வேறு கலந்துரையாடல்களில் ஜனாதிபதியும் பிரதமரும் ஈடுபடுகிறார்கள்? என அண்மையில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இதன்போது பதறிப் போய் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு இல்லை என்றார்.

எனினும் இல்லை எனக் கூறி வாயை மூடுவதற்கு முன்னரே, நிதி அமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் ரணில் விலக வேண்டும் என அமைச்சரவையில் இருக்கும் தம்மிக்க பெரேரா கூறியிருக்கிறார். நாளை பிரதமர் பதவியில் இருந்தும் ரணிலை வெளியேற வேண்டும் என ஆளும் கட்சியினர் கூறலாம்.

ஜனாதிபதிக்கு எதிராக நாளை நடைபெறும் போராட்டத்திற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்க இணங்கியுள்ளோம். சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான கலந்துரையாடல்களையும் எதிர்க்கட்சியுடன் இணைந்து பாராளுமன்றத்துக்குள் மேற்கொண்டு வருகிறோம் என்றார்.

கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவதற்கு

# ஒன்றிணைந்தால் ஒருநாள் போதும்



ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஓரணியில் திரண்டால், ஒரே நாளில் ஜனாதிபதியை பதவியில் இருந்து விலக்கலாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிக்கா பிரேமசந்திர தெரிவித்தார்

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்க வேண்டுமாக இருந்தால், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, சோஷலிச முன்னணி என அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன், புபுத ஜெயக்கொடி உள்ளிட்டோர் போராட்டத்தில் ஒன்றாக இணைந்து கைகோர்த்துக்கொண்டு முன்னிலையில் இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கும் பட்சத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் கண்ணீர்புகை பிரயோகம், பெட்டன்பொல் பிரயோகம் நீர்தாரை பிரயோகம் என்பனவற்றுக்கு அரசியல் கட்சித் தலைவர்களே முதலில் முகங்கொடுக்க வேண்டும். இவ்வாறு அனைவரும் ஓரணியாகத் திரண்டு போராடினால், ஜனாதிபதியை 24 மணித்தியாலங்களுக்குள் நிச்சயமாக விரட்டியடிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

# குழந்தைத்தனத்தை மீட்டுப் பார்க்கின்றேன்...



"சைக்கிள் ஓட்டுங்கள்" என வலியுறுத்துவது முறையானதல்ல; ஆனால், இலங்கையின் இன்றைய நிலைமையில் சைக்கிள் ஓட்டுவதன் மூலமாக தனக்குள் இருக்கும் குழந்தைத்தனத்தை மீண்டும் மீட்டிப்பார்க்க முடியும். அத்துடன் அனுபவத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பது, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நெதர்லாந்து நாட்டின் தூதுவர் தஞ்சா கோங்கிரிஜ்ப்பின் அனுபவ பகிர்வாக இருக்கிறது.

# குரு பூர்ணிமா





சீரடி சாயி பாபா இருவரையும் குருவாக வழிபடும், சாயி பக்தர்களுக்கு உரித்தான புனித நன்நாள் 'குரு பூர்ணிமா' தினமான எதிர்வரும் பௌர்ணமி 13 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சீரடி சாயி இராஜகோபுரத்தில், வட இந்திய சீரடி சாயி சமாஜத்தின் ஏற்பாட்டில், பூஜித்து எடுத்துவரப்பெற்ற, சீரடி சாயி 'புனிதக்காவி சீரடி கொடி' இராஜ கோபுரத்தில் ஏற்றிவைக்கப்படவுள்ளது.

அன்று காலை 5 மணியளவில் காக்காட ஆராத்தியுடன், புட்டபர்த்தி, மைலாப்பூரில் கிடைக்கப்பெற்ற சாயி அவதாரங்களின் திருவுருவச்சிலைகளுக்கு பரிபூரண அபிஷேகங்கள் செய்யப்பட்டு, அவர்களது பாத திருவடிகளுக்கு பாதபூஜையுடன் மதிய ஆர்த்தி நடைபெறும். மாலை 5 மணிக்கு சாயங்கால ஆர்த்தியும் சீரடி சாயி நாதரின் பல்லக்கு பவனியுடன் இரவு மங்கள ஆராத்தி நடைபெறும்.

# 10 பேர் கைது

இந்தியாவுக்கு கடல்மார்க்கமாக, சட்டவிரோதமான முறையில் செல்ல முயன்ற குற்றச்சாட்டின் கீழ் 10 பேர் தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 9 மாத குழந்தையும் 1 வயது மற்றும் 7 வயதான இருவரும் 3 பெண்களும் 4 ஆண்களும் அடங்குகின்றனர் என இலங்கை கடற்படை அறிவித்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# வங்கி வட்டி வீதங்கள் உயர்வு



இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வட்டி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வட்டி வீதத்தினையும் முறையே 14.50 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்கும் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

அண்மையில் எதிர்பார்த்ததை விட உயர்வாக முதன்மைப் பணவீக்கம் உயர்வடைந்தமை அத்துடன் எதிர்வரவுள்ள காலப்பகுதியில் அதிகரித்த உயர்வான பணவீக்கம் என்பவற்றை கவனத்திற் கொண்டு, நாணயக் கொள்கையினை மேலும் இறுக்கமடையச் செய்தலானது ஏதேனும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் அதிகரிப்பதனைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமானதாக இருக்கும்.

அனைத்து பொருளாதார துறைகளுக்கிடையிலும் ஏதேனும் விலை அழுத்தங்கள் உயர்வடைதலின் பரந்தளவான பாதகமான விளைவுகளுக்கு எதிராக, ஏனையவைகளுக்கு மத்தியில் நுண்ணிய, சிறிய தொழில்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்தப் பொருளாதார நடவடிக்கைகள் அத்துடன் நிதியியல் துறை செயலாற்றம் என்பவற்றின் மீது இறுக்கமான நாணய நிலைமைகளின் தாக்கத்தின் மீது கவனம் செலுத்தியிருந்தது.

போக்குவரத்து சபையின்

# பஸ்களுக்கு டயர் சிக்கல்



விலைகள் அதிகரிப்பதால் போட்டி நிறைந்த தற்போதைய சந்தையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களுக்கு டயர் உள்ளிட்ட ஏனைய உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதில் சிக்கல்கள் நிலவுவது தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் புலப்பட்டது.

நாட்டில் தற்பொழுது நிலவும் நெருக்கடியான பொருளாதார சூழ்நிலையில், பொது மக்களுக்கு வினைத்திறனான முறையில் போக்குவரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் தற்போதைய நிலைவரம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் இந்தத் தகவல்கள் வெளிப்பட்டன.

அரசின் போக்குவரத்து சேவையை மேலும் விஸ்தரிக்க வேண்டியிருக்கின்றபோதும், தற்பொழுது காணப்படும் சூழ்நிலையில், விலை அதிகரிப்புக் காணப்படுவதால் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

# பெண் பொலிஸுக்கு பாலியல் தொல்லை

**பொலிஸ் சாரதிக்கு விளக்கமறியல்**

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த பொலிஸ் சாரதியை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று (07) வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

அந்தப் பெண் பொலிஸாரை, பொலிஸ் நிலையத்தில் வைத்து புதன்கிழமை (06) கையைப்பிடித்து பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றஞ்சாட்டி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கொண்டு வந்ததையடுத்து, உடனடியாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை பணியில் இருந்து இடைநிறுத்தியதுடன் அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனை வழங்கினார்.

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (1) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டிரெவலர்ஸ் மார்க்கெட்பிளேஸ் (பீவீடீ) எல்டீடி
பீ - வி 00214561
இல. 132/2/9, ஹில் சிட்டி கொமர்சியல் கொம்பிளெக்ஸ், டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி.

லியோரா (பீவீடீ) எல்டீடி
பீ - வி 00259728
வெல்கொன் டி வெக்ட்டரி, எலபத, இரத்தினபுரி.

அரிம்பு (பீவீடீ) எல்டீடி
பீ - வி 00258957
மே/பா வெல்கொன் டி வெக்ட்டரி, எலபத, இரத்தினபுரி.

**பணிப்பாளர்கள்**

பிரசவத்துக்காக வைத்தியசாலை செல்ல

# கர்ப்பிணிகள் அழைக்கவும்



## இலவச வாகன சேவை நடைமுறை

எம்.எஸ்.எம். ஹனீபா

எரிபொருள் தட்டுப்பாட்டை கருத்தில்கொண்டு பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் கர்ப்பிணித் தாய்மார்களை பிரசவத்துக்காக வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கு இலவச ஓட்டோ சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார வைத்தியதிகாரி ஏ.யூ. அப்துல் சமட், நேற்று (07) தெரிவித்தார்.

இச்சேவை, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் பின்தங்கிய பிரதேசத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களை பிரசவத்துக்காக வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கு பல அசௌகரியங்கள் ஏற்படுவதாக அறிய முடிகின்றது. இதனை கருத்தில்கொண்டு, இலவச போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள மதத் தலைவர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், ஓட்டோ சாரதிகள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு உள்ளதாகவும் இச்சேவை கோமாரி கிராமத்திலிருந்து முதலாவதாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த வாகன சேவை, 1919 அவசர அம்பூலன்ஸ் சேவைக்கு மேலதிகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், கோமாரி, குடாக்களி, செங்காமம், ஊரணி ஆகிய பின்தங்கிய பிரதேச மக்கள் இதனால் பெரும் நன்மை அடைவார்கள் எனவும் தெரிவித்தார்.

இலவச வாகன வசதி தேவைப்படுபவர்கள் தத்தமது கிராம சேவை உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியுமெனவும் மேலும் தெரிவித்தார்.

கல்முனை

# ஓட்டோ சாரதிகள் போராட்டம்





பாறுக் ஷிஹான், நூருள் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ், சர்ஜுன் லாபீர்

எரிபொருள் உரிய முறையில் கிடைக்க ஆவன செய்யுமாறு கோரி, கல்முனை ஓட்டோ சாரதிகள், நேற்று (07) காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டமானது, கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் அருகில் ஆரம்பித்து, மாநகர பகுதியினூடாக ஊர்வலமாகச் சென்று, பின்னர் கல்முனை பிரதேச செயலகம், கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் ஆகியவற்றைச் சென்றடைந்தது.

இவ்வாறு கல்முனை பிரதேச செயலகம், கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஓட்டோ சாரதிகள் தங்களுக்குரிய எரிபொருள் உரிய முறையில் கிடைக்க ஆவன செய்யுமாறு, மகஜர்களை கையளித்துள்ளனர்.

எரிபொருள் பிரச்சினை காரணமாக, தாம் வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாகவும் அத்தியாவசிய சேவை என சில துறையினருக்கு எரிபொருள் வழங்கப்படுவதாகவும் எமது சேவையும் அத்தியாவசிய சேவையின் ஒரு பகுதியாக கருதி, எமக்கான எரிபொருளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



## முன்னுரிமை...

மரம் அரியும் தொழிலாளர்களுக்கு, ஆரையம்பதியிலுள்ள ஐ.ஓ.சி ஊடாக முன்னுரிமை அடிப்படையில், நேற்று (07) எரிபொருள் வழங்கிவைக்கப்பட்டது. ஆரையம்பதியிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு நேற்று அதிகாலை 6,600 லீற்றர் பெற்றோல் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மேற்படி மரம் அரியும் தொழிலாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

(படங்கள்: ரீ.எல். ஜவ்பர்கான்)



சந்திவெளியில்

# குடும்பஸ்தர் வெட்டிக் கொலை

## மகன் உட்பட அறுவர் கைது

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, சந்திவெளி பிரதேசத்தில் கணவன் - மனைவிக்கிடையே நேற்று முன்தினம் (06) இரவு இடம்பெற்ற சண்டை காரணமாக குடும்பஸ்தர் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், கொலை செய்யப்பட்டவரின் 17 வயது மகன் மற்றும் மூன்று பெண்கள் உட்பட 6 பேரை கைது செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி, கல்லூர் வீதி பாலைத்தேனாவைச் சேர்ந்த 38 வயதுடைய கந்தசாமி இளையராஜா என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செயயப்பட்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக உருவெடுத்துள்ளது.

மனைவியின் உறவினர்கள் மைத்துனர் மீது கத்தியால் வெட்டியதையடுத்து, அவர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

# விறகு எடுக்க சென்றவர் யானை தாக்கி மரணம்

எப்.முபாரக்



வீட்டில் எரிவாயு முடிந்த நிலையில் சமைப்பதற்காக, திருகோணமலை மாவட்டத்தின் வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதிக்குள் விறகு எடுக்க சென்ற ஒருவரை, காட்டு யானை தாக்கியதையடுத்து, கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் (06) மாலை இடம்பெற்றுள்ளதாக வான்எல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான 60 வயதுடைய அபேநாயக்க ஹேரத் என்பவரே, இவ்வாறு காட்டுப் பகுதியில் விறகு எடுக்கச் சென்ற போது மறைந்திருந்த காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

சடலம், கந்தளாய் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திங்களன்று கொடியேற்றம்

சகா



திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு, எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், கோவில் குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவம்,ஜுலை மாதம் 28ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவுள்ளதாக கோவில் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

இற்றைக்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோவிலாக அமைக்கப்பட்டு, பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோவில் அமைக்க பெற்று, நான்கு ஜாம பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த வருட ஆடிவேல் உற்சவம் கொரோனா தாக்கம் காரணமாக நடைபெறவில்லை. இம்முறை இதனை வெகு சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அன்னதானம் வழங்க விரும்புகின்ற பொதுமக்கள், கோவில் நிர்வாகத்தை தொடர்புகொள்ளலாம்.

சுற்றுலா பயணிகளுக்காக

# காத்திருக்கும் வன்னேரிக்குளம்

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் தற்போது சுற்றுலா பயணிகளை வரவேற்க காத்திருக்கிறது.

கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்களாக இருந்த சு.தயாபரன், நா.சபாநாயகம் ஆகியோர் எடுத்த முயற்சி காரணமாக வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் 65 இலட்சத்துக்கு மேற்பட்ட நிதியில் உருவாக்கப்பட்டது.

குறித்த சுற்றுலா மையத்தில் முக்கியமான அடிப்படை



வசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. குடிநீர், மின்சாரம், மலசலகூட வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

கரைச்சி பிரதேச சபையால் வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் கடந்த வாரம் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 15 பணியாளர்கள் இரண்டு நாள்கள் இரவு பகலாக தங்கியிருந்து பணிகளை மேற்கொண்டு இருந்தனர்.

வன்னேரிகுளம் வீதி புனரமைக்கப்பட்டு உள்ளதன் காரணமாக, செயலிழந்த சுற்றுலா மைய செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு கரைச்சி பிரதேச சபையால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பல தேசங்களில் இருந்து பறவைகளும் இயற்கையின் அழகு குளமும் அதனோடு இணைந்த அருவிகளும் இணைந்த வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் சுற்றுலா பயணிகளை வரவேற்க காத்திருக்கிறது.

திருட்டு சைக்கிளை

# உரிமையாளரிடமே விற்க வந்த இளைஞன்

எம்.றொசாந்த்

பொருட்களை விற்பனை செய்வதற்கான பிரபல இணையத்தளத்தை பயன்படுத்தி, திருட்டு சைக்கிளை விற்பனை செய்ய முற்பட்ட இளைஞன், வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், மூளாய் வேரம் அக்கினி வைரவர் கோவிலில் வைத்து, பொன்னாலை இளைஞன் ஒருவரின் சைக்கிள் திருட்டு போயிருந்தது. இது தொடர்பில் அன்றைய தினமே வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து, பொருட்களை விற்பனை செய்வதற்கான விளம்பரங்களை வெளியிடும் பிரபல இணையத்தளம்



ஒன்றில் திருடப்பட்ட சைக்கிள் விற்பனை செய்யப்படவுள்ளதாக விளம்பரப்படுத்தப்பட்டு இருந்தது.


அதனை அவதானித்த சைக்கிளின் உரிமையாளர், விளம்பரத்தில் இருந்த தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்டு, சைக்கிளை வாங்கவுள்ளதாக கூறி, விலையை பேசி தீர்மானித்து, சங்கானை பகுதிக்கு வருமாறு கூறியுள்ளார்.

அதனை நம்பி சைக்கிளை உரிமையாளரிடமே விற்க வந்த நிலையில் மடக்கிப் பிடித்தனர்.

விற்பனைக்கு கொண்டு வந்த இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, வைரவர் கோவில் இசை நிகழ்ச்சிக்கு தாம் வந்திருந்த போது, தம்மிடம் ஒருவர் இந்த சைக்கிளை 8ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தததாகவும் அதனையே தாம் வாங்கி மீள விற்பனை செய்வதற்காக விளம்பரப்படுத்தியதாகவும் கூறியுள்ளார்.

இதையடுத்து சைக்கிளை விற்பனை செய்ய வந்த இளைஞனை, வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்து, பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

# நவீன ஸ்கேனருடன் இருவர் கைது



செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு நகர் பகுதியில் வைத்து அதிநவீன ஸ்கேனர் இயந்திரத்துடன் தென்பகுதியைச் சேர்ந்த இருவரை, பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

இவர்கள் திங்கட்கிழமை (04) கொழும்பில் இருந்து புதுக்குடியிருப்பிற்கு வந்துள்ளார்கள். பின் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு நோக்கி பயணித்த போது முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களிடம் இருந்த அதிநவீன ஸ்கேனர் இயந்திரம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த ஸ்கேனர் மாணிக்கக்கல், தங்கம் என்பனவற்றை அடையாளம் காட்டும் என புலன் விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், இவர்கள் எங்கு சென்றார்கள் என்ன செய்தார்கள் தொடர்பான தகவல்களை முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# மண்ணெண்ணெய் 3,600 லீட்டர் மீட்பு



சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, நாச்சிக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3,600 லீட்டர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். போதனாவுக்கு மருந்துகள் அன்பளிப்பு

எம்.றொசாந்த்




யாழ்.போதனா வைத்தியசாலையில் தட்டுப்பாடு நிலவும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், எஸ்.கே.நாதன் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்பில் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமாரிடம், என்.சிவகுமார் இவற்றை வழங்கி வைத்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியின் வேண்டுகோளுக்கு அமைய, 8 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மருந்து பொருட்களே வழங்கி வைக்கப்பட்டன.

# கிளிநொச்சியில் ஐ.நா உயரதிகாரிகள்



நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சியில் உணவுப் பாதுகாப்பு நெருக்கடி தொடர்பான ஐ.நா உயரதிகாரிகள் கலந்துகொண்ட கலந்துரையாடல், நேற்று முன்தினம் (06) நடைபெற்றுள்ளது.

உணவுப் பாதுகாப்பு நெருக்கடி தொடர்பாக நாடளாவிய ரீதியில் மாவட்ட அடிப்படையில் நேரடி கள ஆய்வு செய்யும் ஐ.நா உயரதிகாரிகள் கிளிநொச்சிக்கு வருகை தந்து கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

இக்கலந்துரை யாடலின்போது, கிளிநொச்சி மாவட்டத்தின் உணவு பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக ஆராயப்பட்டதோடு விவசாய, விலங்கு வேளாண்மை உற்பத்திகளின் தற்போதைய நிலை மற்றும் உற்பத்திகளுக்கான பிரதானமான தடைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சிறுபோக அறுவடையை மேற்கொள்வதில் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள், அறுவடை மேற்கொள்ள முடியாத போது ஏற்படக் கூடிய உணவு நெருக்கடி தொடர்பாகவும் விவசாய பிரதிநிதிகளினால் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.



## பலாங்கொடைக்கும் கிடைத்தன...

தமிழக நிவாரணங்கள் இம்புள்பே பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நன்பெரியல், வலேபொட, மாரதென்ன, சிசில்டன், வளவ, கெப்பொக் ஆகிய தோட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 2,073 குடும்பங்களுக்கு நேற்று (07) வழங்கி வைக்கப்பட்டன.

(மஹிந்த குமார்)





### கலவான பிரதேச தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு

# டிப்போவால் எரிபொருள் விநியோகம்

■ உவந்திர பிரியங்கர

கலவான பிரதேச தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு கலவான இ.போ.ச டிப்போவால் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சகல டிப்போ மூலமும் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு தேவையான எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடியால் தேயிலை தொழிற்றுறை பாரிய பின்னடைவை சந்தித்துள்ளதால் எரிபொருள் விநியோகத்தை டிப்போக்கள் மூலம் முன்னெடுக்குமாறு, இலங்கை போக்குவரத்து சபையால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கலவான டிப்போ முகாமையாளர் பிரசன்ன லலித் குமார தெரிவித்துள்ளார்.



இதற்கமைய நேற்றைய தினம் (07) கலவான டிப்போவுக்கு 13,200 லீற்றர் டீசல் கிடைத்துள்ளதென்று தெரிவித்த அவர், தற்போது இரண்டு நாளைக்கு ஒரு தடவை தேயிலை கொழுந்து சேகரிப்பதற்கு எரிபொருள் விநியோகிக்கப்படுவதால் வாரம் முழுவதும் தொழிற்சாலை பணிகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பணியாளர்கள் போராட்டத்தில்...

நோயாளர்களுக்கான மருந்துகள் இன்மை, நோயாளர்களுக்கான உணவு வழங்கப்படாமை, நாட்டில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறை ஆகியவற்றுக்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி, நேற்று (07) மலையகத்தின் பதுளை, நாவலப்பிட்டி, கம்பளை உள்ளிட்ட பல வைத்தியசாலைகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (எஸ். யோகா, ராமு தனராஜா, ரஞ்சித் ராஜபக்ஸ, மலர்வேந்தன்)

















## இரும்பு வேலி

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை, கைலகொட சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையமானது, இரும்பு கம்பிகளால் மூடப்பட்டுள்ளது.

'எரிபொருள் இல்லை; எரிபொருள் வரும் திகதி தெரியாது' என்ற அறிவிப்பு பலகையும் தொங்கவிடப்பட்டுள்ளது.



எனினும் குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் கடந்த 12 நாள்களாக நீண்ட வாகன வரிசைகள் காணப்படுகின்றன.

### நகர மத்தியில் ஒலி எழுப்பி

## எதிர்ப்பை தெரிவித்தனர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நேற்று (7) பெற்றோல் விநியோகிக்கப்பட்டதுடன், இதனைப் பெற்றுக்கொள்ள முடியாது போன மோட்டார் சைக்கிள்காரர்கள் ஒலி எழுப்பி, ஹட்டன் நகர மத்தியில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

நேற்றைய தினம் குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 6,600 லீற்றர் பெற்றோல் கிடைத்ததுடன், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அதனை விநியோகிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆயிரக்கணக்கான வாகனங்கள் நீண்ட வரிசையில்



காத்திருந்தன.

எனினும் இவ்வாறு காத்திருந்த வாகனங்களுள் எரிபொருள் கிடைக்காமல் போன மோட்டார் சைக்கிள்காரர்கள் சிலர், பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி நீண்ட நேரமாக ஒலியெழுப்பி தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

## பஸ் தரிப்பிடம் இன்மையால் மக்கள் அவதி

■ இரா.யோகேசன்

ஹட்டன்-பொகவந்தலாவ பிரதான வீதியின் கிளங்கன் வைத்தியசாலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பஸ்தரிப்பிடம் பல குறைபாடுகளுடன் காணப்படுகின்றது.

குறிப்பாக, கிளங்கன் வைத்தியசாலைக்கு வருகை தரும் மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோர்வூட் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் குறித்த பஸ்தரிப்பிடத்தை பயன்படுத்தும் நிலையில், இந்த பஸ் தரிப்பிடம் மோசமான நிலையில் இருப்பதாகவும் இதனால் மழை, கடும் வெயில்



நேரங்களில் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த பஸ் தரிப்பிடம் உரியமுறையில் பராமரிக்கப்படுவதில்லை என்றும் இதனை மக்கள் பயன்படுத்தும் வகையில் சீர் செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## இ.போ.ச பஸ்கள் இன்மையால் மக்கள் அவதி

■ பி.கேதீஸ்

நாவலப்பிட்டி இ. போ. ச டிப்போவிலிருந்து சேவையில் ஈடுபடும் நீண்ட தூர மற்றும் குறுந்தூர பஸ் சேவைகள் இன்மையால், தாம் கடும் சிரமங்களுக்கும் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகியுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை - நாவலப்பிட்டி வீதியில், தற்போது இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள், சேவையில் ஈடுபடவில்லை. இதன் காரணமாக ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள், பருவ பயணச்சீட்டுடன் தமது அன்றாட கடமைகளுக்கு செல்லும் ஏனைய பிரயாணிகள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டீசல் நெருக்கடியால் அந்த வீதிகளில் தனியார் பஸ்கள் சரியாக இயங்காததாலும் பயணிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

நாவலப்பிட்டி டிப்போவில் கடும் டயர் தட்டுப்பாடு நிலவுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் டயர்கள் இல்லாததால் சுமார், 22 பஸ்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நாவலப்பிட்டி டிப்போ முகாமையாளர் அநுர ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், அதற்கேற்ப டயர் நெருக்கடிக்கு தீர்வு கிடைத்ததன் பின்னர் எதிர்காலத்தில் பஸ்களை முறையாக சேவையில் ஈடுபடுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

### எட்டியாந்தோட்டையில்

## மனிதநேயமிக்க வர்த்தகர்

■ என்.ஆராச்சி

எட்டியாந்தோட்டை, மீகஹாவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் மனித நேய நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தன்னால் முடிந்த தீர்வாக, தனது வர்த்தக நிலையத்தில் உலர் உணவு பொருட்களை இலவசமாக எடுத்துச் செல்லும் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், "மக்களின் பொருளாதார





நெருக்கடிக்கு தன்னால் முடிந்த தீர்வாக இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதுடன் கடந்த 10 நாள்களாக இதனை செய்து வருகிறேன்" எனவும் தெரிவித்தார்.

தனது வர்த்தக நிலையத்துக்கு முன்பாக உள்ள மேசையில் தினமும் 5,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை வைப்பதாகவும் பலர் இதனை எடுத்துச் செல்லும் நிலையில், தமது வர்த்தக நிலையத்துக்கு வருகைத் தரும் நுகர்வோரும் தம்மால் இயன்ற உதவிகளை இதற்கு வழங்குவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் தனத வர்த்தக நிலையத்துக்கு வருகைத் தரும் விற்பனை பிரதிநிதிகளும் இந்த நடவடிக்கைக்கு உதவுவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பிரதேசத்திலுள்ள கர்ப்பிணிகள், தாய்மார் உள்ளிட்டோருக்கான போக்குவரத்து சேவைகளையும் கடந்த 5 நாள்களாக முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

### சந்தேகநபரைத் தேடி

## நடந்து சென்ற பொலிஸார்

■ பாலித ஆரியவன்ஸ

சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்வதற்காக பொலிஸார் 6 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்ற சம்பவம் நமுனுகுல பகுதியில் பதிவாகியுள்ளது.

பதுளை பொது வைத்தியசாலையில் குழந்தையொன்றை பிரசவித்த கொட்டுகஹதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், தனது குழந்தை, கணவருடன் ஒட்டோவில் சென்றுக் கொண்டிருந்த போது, லொறி வீதியின் நடுவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, லொறியின் சாரதிக்கும் ஒட்டோவில் பயணித்தவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து லொறியில் இருந்தவர், ஒட்டோவில் இருந்த கணவனையும் மனைவியையும் தாக்கிவிட்டு, பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபரை கைதுசெய்ய செல்ல பொலிஸாரின் வாகனத்தில் எரிபொருள் இருக்கவில்லை. இதனால் 6 கிலோ மீற்றர் நடந்து சென்று சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

## பழைய ஜோடிகள்



தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்குள் திருமணம் மற்றும் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு நடமாடும் சேவையின் ஊடாக அவை வழங்கிவைக்கப்பட்டன. அத்துடன், பதிவுத் திருமணம் செய்யாதவர்களும் பதிவுத் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

## திறந்து வைக்கும் நிகழ்வு

டுபாய் சாஜாவில் இயங்கும் லக்சிரி காகோ நிறுவனத்தின் இயக்குநர் எம். எஸ். எம். ரவுஸ்டீன் இலங்கையிலுள்ள மக்கள் தங்களுக்கு த்தேவையான உணவுப் பொருட்களை மிக இலகுவான முறையில் பெற்றுக் கொள்வதற்கான முகவர் நிலையம் டுபாயில் திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கைக்கான டுபாய் வடக்கு எமிரெட்டிக்கான பிரதான கவுன்சிலர் நிலந்த விஜயரட்ன பிரதம அதிதியாக கலந்து



கொண்டு திறந்து வைத்தார். இதன் போது லக்சிரி காகோ நிறுவனத்தின் இயக்குநர் தொழிலதிபர் எம். எஸ். எம். ரவுஸ்டீன், கண்டி மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிஅமைப்பாளர் சிவபாலன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

(இக்பால் அலி)

# சுகாதார வழிகாட்டல்களை இறுகக் கடைப்பிடிப்பதே அவசியம்

அறுவுறுத்திய ஒருசில விநாடிகளுக்குள் கற்பூரத்தைப் போல, அப்படியே ஒருசிலர் கடைப்பிடிக்கத் தொடங்கிவிடுவர். இடித்து, இடித்து கூறினாலும் இன்னும் சிலருக்கு தலைக்குஏறவேஏறாது. மற்றொருபிரிவினரோ தொடர்ச்சியாக கடைப்பித்துவருவர். சில நாள்களுக்கு மட்டுமே கடைப்பிடிக்கும் பலரும், குறுகிய காலத்துக்குள் கைவிட்டுவிடுவோரும் இருக்கத்தான் செய்கின்றனர். நல்லப்பழக்க வழக்கங்களுக்கு இதுதான் நிலைமை. ஆனால், தீங்கிழைக்கக்கூடிய தீய பழக்கங்களை ஒருசில நொடிகளிலேயே பலரும் பற்றிப்பிடித்துக்கொண்டு சதாகாலமும் வழக்கப்படுத்திக் கொள்வர். கொரோனா தொற்றின் போது, கடுமையான சட்டங்களை அமல்படுத்தியே முகக்கவசத்தையும் ஏனைய சுகாதார வழிகாட்டல்களையும் திணிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நமது நாட்டில் மட்டுமன்றி, உலகில் பல நாடுகளிலும் இதேபோன்றதொரு நிலைமைதான் ஏற்பட்டது. எமனைப் போல வேடமணிந்து நடித்துக்காட்டியும் இருந்தார்கள். அந்தளவுக்கு கொரோனா வைரஸ் உயிரைப் பறித்துவிடும். பல முக்கியஸ்தர்களையும் கொரோனா அலை விட்டுவைக்கவில்லை.

கொரோனாவின் தாயகமென அறியப்பட்ட சீனாவில், அதன் தாக்கம் இன்னும் தலைவிரித்து வீரியம் கொண்டு ஆடுகின்றது. அண்டை நாடான இந்தியாவிலும் சுகாதார வழிகாட்டல்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன. நமது நாட்டை பொறுத்தவரையில், பெரும்பாலான பொது இடங்களில், கைககளை கழுவுதல், திரவங்களை தெளித்தல், கைகளில் திரவங்களை பூசிக்கொள்ளுதல் பரவலாக இல்லாமல் போய்விட்டன.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலைமையால், செலவுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அவை தவிர்க்கப்பட்டிருக்கலாம். எனினும், கொரோனாவின் மாற்று திரிபுகள் குறித்து அவதானமாகவே இருக்கவேண்டும். ஆகக் குறைந்தது, பொது இடங்கள், பொதுப் போக்குவரத்துகளில் முகக்கவசங்களை அணித்திருந்தல் கட்டாயமாகும்.

முகக்கவசம் அணிந்திப்பது கொரோனா வைரஸ் தொற்றிக்கொள்ளாமல் இருப்பதற்கான ஆகக்குறைந்த பாதுகாப்பு கவசமாகும். ஆனால், தடுபூசிகளை ஏற்றிக்கொள்வதே உத்தமம். இரண்டு தடுப்பூசிகளுடன் நிறுத்திக்கொண்டவர்களும் உள்ளனர். நான்காவது தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்களும் உள்ளனர். ஒரு தடுப்பூசியையேனும் ஏற்றிக்கொள்ளாதவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால், கொரோனாவின் வீரியமும் திரிபுகளுக்கும் குறைவே இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 6,64,197 ஆக அதிகரித்துள்ளது. நேற்று (07) மட்டும் 20 பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். நீண்ட நாள்களுக்குப் பின்னர், கடந்த இரண்டு நாள்களில் மட்டும் இருவர் மரணமடைந்துள்ளனர். அவ்விருவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இருக்கும் நெருக்கடியில், கொரோனாவும் மீண்டும் வீரியமெடுத்து ஆடுமாயின், பலரது வாழ்க்கையே ஆட்டங்கண்டுவிடும். ஆகையால், வைரஸ் தொற்றிக்கொள்வதை தடுத்துக்கொள்வதற்காக, ஆகக் குறைந்த சுகாதார வழிகாட்டல்களையேனும் கடைப்பிடிப்பதே சிறந்தது.

மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள் காரணமாக பல வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் மந்தகதியிலேயே நகர்கின்றன என்பதால், சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதே சிறந்தது என்பதை ஞாபகமூட்டுகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மானுடர் யாவரும் ஒரே இமைதான். ஏன் என்று கேட்க, ஆள் இல்லா பிள்ளைகளையும் கல்வியூட்டி, நற்பிரஜையாக்க இந்த சமூகத்தால் முடியும்.

நிராகரிக்கப்படும் மனிதர்களால் நஷ்டமடையப் போவது, இந்த முழு உலகமும் என்பதை உணர்க. பண்பான நற்பிரஜைகளை உருவாக்காது விட்டால், அவனி அசைய ஆரம்பித்து விடும்.

எல்லோரும் நம்மவரே எனும் எண்ணம் வந்தேயாக வேண்டும். பசிப்பிணி நீங்காது விட்டால், எப்படி ஒருவர் அடுத்த கட்டத்துக்கு நகர முடியும்?

அடிப்படை வசதிகள் இன்றி வாழும் ஏழைகளால், உலகம் தேய்ந்து போகும் ஆபத்து உண்டு. பிரஜைகள் யாவரும் உணவு, வீடு, கல்வி போன்ற அத்தியாவசிய வசதிகள் இன்றி எப்படி நகர முடியும்?

எளிய முறையில் வாழ என்னென்ன வசதிகளை செய்ய வேண்டும் என அனைவரும் இணைந்து செயல்பட்டால் ஒழிய, வெறும் வாய்ப்பேச்சும் நடிப்பான கருணையும் எதற்கு? செய்யும் சின்ன உதவிகளே பிரமாண்டமாகும். முழு உலகையும் வலிமையாக்குக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆசிரியர்களை நியமியுங்கள்

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் பாடசாலைகளின் உயர்தரப் பிரிவுகளில் கணித, விஞ்ஞான, வர்த்தக பிரிவுகளில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்குமாறு பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலயத்தில் காணப்படுகின்ற 1ஏபி, 1சி பாடசாலைகளில், உயர்தர வகுப்புகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்ட காலமாக காணப்படுகின்றது. குறிப்பாக கணித, விஞ்ஞான, வர்த்தக பிரிவுகளில் மாணவர்களுக்கான ஆசிரியர்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்களின் பற்றாக்குறை தொடர்பாக, பெற்றோர்களால் கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

முக்கியமாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த துணுக்காய் கல்வி வலயத்தின் பாடசாலைகளில், ஆசிரியர்கள் நியமிக்கப்படாததன் காரணமாக, மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயம் கடந்த காலங்களில் ஆராயப்பட்ட போதிலும் ஆசிரியர்கள் பணிக்கு வரவில்லை.

துணுக்காய் வலயத்தில் காணப்படுகின்ற ஆசிரியர்களின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு, வட மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கை ஆகும்.

நடராசா கிருஸ்ணகுமார்

# நெருக்கடியில் இருந்து மீள நம் வேர்களைத் தேடுவோம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு இந்த அரசாங்கத்திடமோ எமது அரசியல்வாதிகளிடமோ எந்தவொரு தீர்வும் இல்லை என்பது, இப்போதைக்கு நமக்கு விளங்கியிருக்க வேண்டும்.

கடனுக்கு, கடன் வாங்குவதற்கு அப்பால், பொருளாதார நிபுணர்களிடம் சொல்வதற்குப் புதிதாக எதுவும் இல்லை. நவதாராளவாதப் பொருளாதாரக் கட்டமைப்பு எற்படுத்திய நெருக்கடிக்கு, அக்கட்டமைப்புக்குள்ளேயே தீர்வைத் தேடுவது முட்டாள்தனமானது என்பதை, நெருக்கடியின் நீட்டிப்பு உணர்த்திருயிருக்கிறது.

இந்த நெருக்கடி செல்வந்தர்களை இன்னும் செல்வந்தர்களாக்குகிறது. நாட்டின் வளங்களை கேட்டுக்கேள்வியின்றி விற்க வழிசெய்கிறது. அந்நியச் செலாவணியைக் கொண்டுவருவதன் பெயரால், சட்டங்களைத் திருத்தவும் நாட்டின் இறைமையை அடகுவைக்கவும் முடிகிறது.

எல்லாவற்றையும் சர்வதேச நாணய நிதியத்திடம் பாரப்படுத்திவிட்டு, கையேந்துகிற அறிவுசார் சமூகத்தின் அவலத்தையும் அயோக்கியத்தனத்தையும் கடந்த சிலமாதங்களாகக் கண்டுள்ளோம்.

அரசாங்கத்தின் அலட்சியப் போக்கும் அரசியல்வாதிகளின் மெத்தனமும் நிலைமையை இன்னமும் மோசமாக்கியுள்ளது. அரசாங்கத்தால் இந்நெருக்கடியைத் தீர்க்கவியலாது என்பது வெளிப்படை. இன்றைய நிலைமைகளும் கடந்த மூன்று மாதகால அனுபவங்களும், இரண்டு முக்கியமான செய்திகளைச் சொல்கின்றன.

முதலாவது, அடுத்த சில மாதங்களுக்கு நிலைமை இன்னும் மோசமடையும். வன்முறைகள் அதிகரித்து, இரத்தக்களரியாக நாடு மாறுவதற்கான வாய்ப்புகள் இல்லாமல் இல்லை.

இரண்டாவது, இலங்கை இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு குறைந்தது நான்கு ஆண்டுகள் எடுக்கும். இலங்கை, தனது வழமைக்குத் திருப்ப பத்தாண்டுகள் ஆகலாம். இவற்றின் பின்னணியில் எம்முன்னுள்ள கேள்வி, இதற்கு நாம் எவ்வாறு முகங்கொடுப்பது?

இவ்வாறான நெருக்கடிகளை இலங்கை, இதற்கு முன்னர் சந்தித்துள்ளது; அதிலிருந்து மீண்டுள்ளது. அந்த உபாயங்களைத் தேடியறிவதும் அதிலிருந்து கற்றுக்கொள்வதும் அவசியமாகிறது.

இவ்வாறான நெருக்கடிகளில், இலங்கையைக் காப்பாற்றிய ஓர் அம்சம் வெற்றிகரமாக இயங்கிய கூட்டுறவு இயக்கமாகும். இலங்கையின் கூட்டுறவு இயக்கத்துக்குத் தனித்துவமான, மக்கள் மயப்பட்ட வரலாறு உண்டு.

இலங்கை விவசாய சங்கத்தின் உந்துததால், 1904ஆம் ஆண்டு முதலாவது கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டது. விவசாய விரிவாக்கம், கிராமிய மக்களுக்கு நவீன விவசாய முறைகளை எடுத்துச் செல்லல் போன்றவற்றை நோக்காகக் கொண்டே இவை உருவாக்கப்பட்டன. இதன் வெற்றிகரமான செயற்பாட்டைத் தொடர்ந்து, 1910இல் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவது பற்றி மக்களிடையே கருத்துகள் கேட்கப்பட்டு, 1911ஆம் ஆண்டு அவை சட்டமாக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் கரங்களாகச் செயற்பட்டன.

1930களில் அதிகாரங்களை ஆங்கிலேயர்கள் இலங்கையர்களுடன் பகிரத் தொடங்கியவுடன் நிலைமைகள் மாறத் தொடங்கின. விவசாயம், காணி ஆகியன தொடர்பான விடயங்களில், இலங்கையர்கள் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கியவுடன், கூட்டுறவு முறையின் முக்கியத்துவம் அதிகரித்தது.

இரண்டாம் உலகப்போரும் 1942இல் இலங்கை மீதான ஜப்பானின் தாக்குதலும் இலங்கைக்கு மிகப்பெரிய நெருக்கடியைக் கொடுத்தது. 1940களில் உணவுப் பற்றாக்குறை அதிகமாக இருந்தது. இறக்குமதி பாரியளவில் குறைந்தது. அதைச் சமாளிக்கப் போதுமான உள்நாட்டு உற்பத்திகள் இருக்கவில்லை. இந்நெருக்கடியை சமாளிக்க அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தை நாடியது. அரிசி, சீனி, துணி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் பங்கீட்டு முறையில் (ரேசன்) விநியோகிக்கும் இடமாக கூட்டுறவுச் சங்கங்கள் மாறின.

அதுவரை தனிப்பட்ட வியாபாரிகளிடம் பொருட்களை வாங்கியோர், விற்றோர் அனைவரும், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகினர். குறுகிய காலத்தில் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டியது. ஒப்பீட்டளவில் மிகச்சிறியதாக அறியப்பட்ட இயக்கம், ஒரு தேசிய அந்தஸ்தைப் பெற்றது. இந்நெருக்கடி காலத்தில், கூட்டுறவு இயக்கமே மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவுசெய்து மக்களைக் காத்தது.

சுதந்திரத்துக்குப் பின்னராக முதலாவது அரசாங்கம், ஏற்றுமதிகளை (தேயிலை, இறப்பர், தேங்காய்) நோக்கிக் கவனம் செலுத்தியது. அத்துறைகளுக்கு, கூட்டுறவு இயக்கம் விரிவுபடுத்தப்பட அனுமதிக்கப்படவில்லை.

அக்காலத்தில் தோட்டத்தொழிற்றுறை, பிரித்தானிய மற்றும் உள்ளூர் முதலாளிகளின் கைகளில் இருந்தது. எனவே, இலங்கையின் ஏனைய பகுதி மக்கள் கூட்டுறவு முறையால் அனுபவித்த பலன்களை தோட்டத்தொழிற்றுறையில் பங்காற்றிய மக்களால் அனுபவிக்க இயலவில்லை.

1960களில் அரசாங்கம், நில சீர்திருத்தத்தை மேற்கொண்டது. முக்கிய தனியார் தொழில்களை தேசியமயமாக்கியது; மற்றும், பொது நிறுவனங்களின் பங்கை விரிவுபடுத்தியது. கடன், விவசாயம், தொழிற்றுறை, நுகர்வோர் ஆகிய பல்வேறு வகையான கூட்டுறவுகளை ஒருங்கிணைத்து, நாடு தழுவிய பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களையும் அதற்கான வலையமைப்பையும் உருவாக்கியது.

இந்த காலகட்டத்தில், இலங்கையின் ஏற்றுமதியின் மதிப்பு வீழ்ச்சியடைந்தது. இதனால் அந்நிய செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே, இறக்குமதிக்கு மாற்றாக உள்நாட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இக்காலத்தில் கூட்டுறவு சங்கக் கடைகள் மீண்டும் பங்கீட்டு முறையிலான உணவை விநியோகிக்க பயன்படுத்தப்பட்டன.

அதேநேரத்தில், கூட்டுறவு தொழிற்றுறை சங்கங்கள், அந்நியச் செலாவணி சார்ந்த இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்பட்டு வெற்றியும் கண்டன. இதற்கு அரசாங்கத்தின் கொள்கைகளும் அரச உதவியும் பெரிதும் பயன்பட்டது.

1965 இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், இறக்குமதிகளை அதிகரித்தது. அத்தியாவசியமற்ற பொருட்கள் அதிகளவில் இறக்குமதியாகின. இலங்கைக்கு கடன் சுமை அதிகரித்தது. இலங்கை முதன்முறையாக சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தியது. அதன் கட்டமைப்பு மாற்றங்களுக்கு உடன்பட்டது. இலங்கை கூட்டுறவு அமைப்பு தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கு சர்வதேச ஆணைக்குழு ஒன்றை அழைத்தது. 1969ஆம் ஆண்டு தனது அறிக்கையை சமர்பித்த ஆணைக்குழு, தாங்கள் உடன்படாவிட்டாலும் ஏனைய நாடுகள் போலன்றி, இலங்கையில் கூட்டுறவு இயக்கம் பயனுள்ள, அவசியமான பங்கை ஆற்றியிருப்பதாகச் சொன்னது. அதேவேளை, இவ்வியக்கம் தன்னார்வ இயக்கமாக இயங்க வேண்டும். அரசு இதில் தலையிடாது ஒதுங்கி இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

இதையடுத்து நாடுமுழுவதிலும் இருந்த 5,818 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்பட்டு 372ஆகக் குறைக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஐக்கிய தேசிய கட்சிக்கு வேண்டியவர்களின் கரங்களுக்கு வழங்கப்பட்டு, அரசியல் நேரடியான கூட்டுறவுச் சங்கத்துக்குள் நுழைந்தது.

1970 தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சியின் தோல்வி இவ்வரசியல் மயமாக்கலுக்கு தற்காலிகமாக முடிவுகட்டியது. ஸ்ரீமா அரசாங்கத்தின் தேசிய பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பதில், கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்காற்றின.

1973இல் ஏற்பட்ட உலகளாவிய எண்ணெய் நெருக்கடி ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியின் பாதிப்புகள் இலங்கையைத் தாக்கியபோது, கூட்டுறவு இயக்கமே கைகொடுத்தது. உணவுப்பங்கீடு, உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல் போன்ற அந்நியச் செலாவணி நெருக்கடியை சமாளிக்க உதவியது.

1977இல் ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் வருகையும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் அறிமுகமும் கூட்டுறவு இயக்கத்தை மெதுமெதுவாகச் சிதைக்கத் தொடங்கின. அரசாங்கம் திறந்த போட்டிச் சந்தையை ஊக்குவித்தது. கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைகள் இதற்கு நேரெதிராக இருந்தன. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுமதிசார் விடயங்களில் கவனஞ்செலுத்துமாறு கோரப்பட்டது. உள்நாட்டு விவசாய உற்பத்திகளை ஊக்குவித்தல், மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை அதிகரித்தல் போன்ற விடயங்கள் நிறுத்தப்பட்டன. உள்நாட்டின் விவசாயிகள் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டார்கள். இறக்குமதியும் நுகர்வும் ஊக்குவிக்கப்பட்டன. அதற்கு ஏதுவாக சட்டங்களும் உருவாகப்பட்டு கூட்டுறவு இயக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் செயற்பாடுகள் தீவிரம் பெற்றன.

1994இல் ஆட்சிமாற்றம் நிகழ்ந்தபோது, இலங்கை முழவதுமான உலகமயமாக்கலுக்கும் திறந்த போட்டிச் சந்தைக்குக்கும் ஆட்பட்டு மீளவியலாத நிலைக்கு தள்ளப்பட்டது. தனியார் நிறுவனங்கள், குறுங்கடன் அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சர்வதேச தொண்டு அமைப்புகள் என்பவற்றின் தோற்றமும் வருகையும் தனியார்மயம், தாரளமயம், நுகர்வு என்பவற்றைத் தக்கவைக்க உதவியது.

இன்று எம்முன்னுள்ள கேள்வி, எம்மிடையே இருந்த கூட்டுறவு இயக்கத்தை மக்களுக்கானதாக மீண்டும் கட்டியெழுப்ப இயலுமா என்பதே? கூட்டுறவின் அடிப்படை சகமனிதனுக்கான மரியாதையும் அனைவரையும் சமமாக மதிக்கும் பண்பும் ஆகும். இது இன்னமும் எம்மிடம் எஞ்சியிருந்தால் மீட்சிக்கான வழி சாத்தியம்!

சென்னை

இரட்டை இலை சின்னத்தை முடக்க கோரிய வழக்கு

# அபராதத்துடன் தள்ளுபடி

அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) இரட்டை இலை சின்னத்தை முடக்கக் கோரிய வழக்கை, 25 ஆயிரம் ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில், அ.தி.மு.க முன்னாள் உறுப்பினரும், ஜே.ஜே.கட்சியின் நிறுவனருமான பி.ஏ.ஜோசப் தாக்கல் செய்துள்ள மனுவில், 'அ.தி.மு.க பொதுச் செயலாளர் பதவியை கைப்பற்றுவதற்கு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி 5,000 கோடி ரூபாய் செலவு செய்துள்ளதாக வாரம் இருமுறை வெளியாகும் பத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது.

எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர்களின் ஆதரவை திரட்டுவதற்காக மேலும் ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சியின் முன்னாள் முதலமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் இடையிலான பிரச்சினை, சாதி ரீதியிலான பிரச்சினையாக உருவெடுத்து, மாநிலத்தில் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைத்துள்ளது.

எனவே, அ.தி.மு.கவின் இரட்டை இலை சின்னத்தை முடக்கி வைத்து, அக்கட்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கு ஜூன் 28ஆம் திகதி மனு அனுப்பினேன். அந்த மனுவுக்கு இதுவரை, எந்தப் பதிலும் இல்லை. எனவே எனது மனுவை பரிசீலித்து அ.தி.மு.கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்' என மனுவில் கோரியிருந்தார்.

மும்பை

## கன்னையா விவகாரம் சிறுமிக்கு மிரட்டல்

நபிகள் நாயகம் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளை கூறிய நுபுர் சர்மாவை ஆதரித்து சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்ட ராஜஸ்தான் மாநிலம் உதய்பூர் நகரை சேர்ந்த கன்னையா லால் என்ற தையல் கடைக்காரர், கடந்த 28 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். அதற்கு ஒரு வாரத்துக்கு முன்பாக, அமராவதி நகரில் மருந்து கடைக்காரர் இதே காரணத்துக்காக படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் கன்னையா லால் படுகொலை சம்பவம் குறித்து, தனது முகநூல் பக்கத்தில் சில கருத்துகளை வெளியிட்ட மும்பை கிர்காவ் பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமியை வாட்ஸ்அப் மூலம் தொடர்பு கொண்ட மர்ம நபர், அச்சிறுமிக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த சிறுமி, பெற்றோர் உதவியுடன் பொலிஸ் நிலையத்தில் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

தெலங்கானா

## 'கொண்டா' கொடுத்தார்



தெலங்கானா பயணத்தின்போது, ராஜ்பவனிற்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடியை, தெலங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் வரவேற்றார்.

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஸ்ரீஅரவிந்தரைப் பற்றிய 75 தகவல்கள் அடங்கிய புத்தகத்தைப் பரிசளித்தார்.

அத்துடன், தெலுங்கானா மாநிலம், அடிலாபாத் மாவட்டத்தில், 400 வருட பாரம்பரியம் கொண்ட, புவிசார் குறியீடு பெற்ற 'செரியாழ்' வண்ண ஓவியத்தையும் பழங்குடியின மக்கள் பயன்படுத்திய 'கொண்டா' என்ற பாரம்பரிய விளக்கையும் நினைவு பரிசாக வழங்கினார்.

சென்னை

## சேவைக் கட்டணம் வசூலிக்கக் கூடாது



உணவகங்கள் தனியாக சேவை கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று மத்திய நுகர்வோர் அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ஹோட்டல்களில், ஜிஎஸ்டி வரி வசூலிக்கப்படும் நிலையில் அது அமலாவதற்கு முன்பு வசூலிக்கப்பட்ட சேவை வரி தொடர்ந்து வசூலிக்கப்பட்டு வருவதாக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பாக மத்திய நுகர்வோர் பாதுகாப்புக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது; சேவை வரி செலுத்தும்படி வாடிக்கையாளர்களை ஹோட்டல்களும் உணவகங்களும் நிர்பந்திக்கக் கூடாது. சேவைக் கட்டணம் தருவதும் தராததும் வாடிக்கையாளரின் விருப்பம் என்றும் உணவின் விலையை தவிர்த்து, கூடுதலாக வேறெந்த கட்டணமும் வசூலிக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடெல்லி

## இளையராஜாவுக்கு நியமன எம்.பி பதவி

### பிரதமர் மோடி வாழ்த்து



மாநிலங்களவை நியமன உறுப்பினராக அறிவிக்கப்பட்டுள்ள இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு (வயது 79) பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பாபாசாகேப் அம்பேத்கரையும், பிரதமர் நரேந்திர மோதியையும் ஒப்பிட்டு 'அம்பேத்கர் அன்ட் மோடி' என்ற தலைப்பில் புளூகிராஃப்ட் பதிப்பகம் வெளியிட்ட நூலுக்கு இளையராஜா எழுதிய முன்னுரை பரபரப்பாக விவாதிக்கப்பட்டது.

அப்போதே இளையராஜாவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்கப்பட வாய்ப்புள்ளதாக பேசப்பட்டது.

இளையராஜாவின் படைப்பு மேன்மை தலைமுறைகளைக் கடந்து மக்களை மகிழ்வித்திருக்கிறது என குறிப்பிட்டுள்ள மோடி, 'அவருடைய வாழ்க்கைப் பயணமும் அதேயளவுக்கு ஊக்கமளிக்கக்கூடியது. அவர் ஒரு சாதாரண குடும்பத்திலிருந்து வளர்ந்து நிறைய சாதித்துள்ளார். அவர் ராஜ்ய சபாவுக்கு வருவதில் மகிழ்ச்சி' என குறிப்பிட்டுள்ளார்.

சென்னை

## சிவாஜியின் சொத்துகளை பிரிப்பதில் பிரச்சினை

நடிகர் திலகத்தின் மகனும் பிரபல நடிகருமான பிரபு மற்றும் அவரது மூத்த சகோதரர் ராம்குமார் ஆகியோருக்கு எதிராக அவர்களது சகோதரிகளான சாந்தி, ராஜ்வி ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் சிவில் வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளனர்.

தங்களுக்கு தெரியாமல் சில சொத்துகளை நடிகர் பிரபு, அவரது சகோதரர் ராம்குமார் ஆகியோர் விற்று விட்டதாகவும், மேலும் சில சொத்துகளை அவர்களுடைய மகன்களின் பெயருக்கு மாற்றம் செய்து விட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்விருவரும் ஜோடிக்கப்பட்ட உயில் ஒன்றை தயாரித்து, தங்களை ஏமாற்றி விட்டதாகவும் அவர்களது சகோதரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

உடுப்பி

## கொக்கு போல் காத்திருப்பு



உடுப்பி மாவட்டம் மல்பேயில் பிரசித்தி பெற்ற மல்பே கடற்கரை உள்ளது. இங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து கடலில் குளித்து செல்கிறார்கள். இவ்வாறு குளிக்கும் சுற்றுலா பயணிகள் சிலர், தங்க ஆபரணங்களை அணிந்து குளிக்கும் போது கடல் அலையில் அது அறுந்து தொலைந்து போகும் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

நீண்ட நேரமாக தேடி பார்த்துவிட்டு சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றுவிடுகின்றனர். ஆனால், அந்த தங்க நகைகள் எப்போதாவது கடலலையில் அடித்து வந்து கரையைச் சேரும் சம்பவமும் நிகழ்கிறது.

தங்க நகைகளை தேடுவதற்காக மல்பே கடற்கரை பகுதியை ஒட்டிய இளைஞர்கள் மல்பே கடற்கரையில் கொக்கு போல் காத்திருப்பது அதிகரித்துள்ளது.

செலான் கார்ட்கள் உதவியால்


# காப்புறுதிக் கொடுப்பனவு செலுத்தல் இலகுவாகிறது

செலான் வங்கி, தனது கடனட்டைதாரர்களுக்கு மற்றுமொறு வசதியை வழங்கும் வகையில், அவர்களின் காப்புறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இலகுமுறை தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. இதற்காக முன்னணி காப்புறுதி சேவைகள் வழங்குநர்களுடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதுடன், அதனூடாக ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிகளைக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களின் மேம்படுத்தப்பட்ட பணப்பாய்ச்சல் நிர்வகிப்பை பேணவும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

'அத்தியாவசிய தேவைகளுக்கான அத்தியாவசிய அட்டை' எனும் தொனிபொருளுக்கு அமைய, 2022 ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை வாடிக்கையாளர்கள் செலான் வங்கி கடனட்டையைப் பயன்படுத்தி, காப்புறுதிக் கொடுப்பனவுகளை இலகுமுறை தவணைக் கொடுப்பனவினூடாக மேற்கொள்ளலாம். இந்தச் சலுகை ஆகக்குறைந்தது ரூ. 10,000 முதல் ரூ. 1 மில்லியன் வரை கொடுப்பனவுகளுக்கு செல்லுபடியாகும். 0% தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள் 3 மாதங்கள் மற்றும் 6 மாதங்கள் வரை நீடித்துக் கொள்ள முடியும். வாடிக்கையாளர்கள் தமது இலகு தவணைக் கொடுப்பனவு திட்டங்களை 7 வேலை நாள்களுக்குள் இலகுமுறை தவணைத் திட்டத்துக்கு மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

செலிங்கோ இன்சூரன்ஸ், AIA இன்சூரன்ஸ், யூனியன் அஷ்யூரன்ஸ், ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ், LOLC மற்றும் ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் போன்ற முன்னணி காப்புறுதி சேவை வழங்குநர்களுக்கு மேற்கொள்ளும் கொடுப்பனவுகளுக்கு இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

தற்போதைய பொருளாதாரச் சூழலில், இல்லப் பணப்பாய்ச்சலை நிர்வகிப்பது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த



விடயமாக அமைந்துள்ளது. இதன் பெறுபேறாக, கடனட்டை பாவனை தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தப்படுவதுடன், இலகுமுறை தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களுக்கான கேள்வியும் அதிகரித்துள்ளது. இயலுமானவரை வாடிக்கையாளர்களுக்கு அவசியமான நிதி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான பங்காளராக செலான் வங்கி திகழ்கின்றது. காப்புறுதிக் கொடுப்பனவுகளுக்கான இலகு முறை தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களை செயற்படுத்தியுள்ளதனூடாக, வாடிக்கையாளர்களின் அவசர பணத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய தீர்வை வங்கி வழங்கியுள்ளது.

நிதித் திட்டமிடல் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மதிநுட்பமான வகையில் தமது செலவுகளை மேற்கொள்வது தொடர்பிலும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த செலான் வங்கி எதிர்பார்க்கின்றது. இது போன்ற நெருக்கடியான காலப்பகுதியில் நாளாந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான நிதிசார் அறிவைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமாக அமைந்திருப்பதுடன், பொது மக்களுடன் பகர்ந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகவும் அமைந்துள்ளது. வெவ்வேறான கொடுப்பனவுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக, இந்த நெருக்கடியான காலப்பகுதியில் வாடிக்கையாளர்களுக்கு தமது பணப் பாய்ச்சலை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கான ஊக்குவிப்பை வழங்குகின்றது.

செலான் வங்கியின் நுகர்வோர் கடன் பிரிவின் உதவிப் பொது முகாமையாளர் இயுஜின் செனெவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "அன்புடன் அரவணைக்கும் வங்கி எனும் வகையில், செலான் வங்கியைச் சேர்ந்த நாம், எம் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கியுள்ள சவால்களை நன்கு புரிந்து கொண்டுள்ளதுடன், அவர்களின் நிதித் தேவைகளுக்கு சம்பந்தப்பட்ட தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான சகல வாய்ப்புகளையும் நாடிய வண்ணமுள்ளோம். மொத்தமாக பெருந்தொகைப் பணத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளால் ஏற்படக்கூடிய சுமையை தணிப்பதாக இந்த இலகுமுறைத் தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள் அமைந்திருப்பதுடன், தற்போதைய சூழலில் அவ்வாறான அர்ப்பணிப்பை மேற்கொள்வதிலும் சிக்கல்கள் காணப்படக்கூடும். கடந்த சில மாத காலப்பகுதியில் மாற்றமடைந்த வண்ணமுள்ள வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறை தொடர்பில் நாம் அதிகளவு அக்கறை கொண்டுள்ளதுடன், நிதிசார் நிவாரணத்தை வழங்குனராக செலான் அட்டைகளைத் திகழச் செய்ய எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

வருடம் முழுவதிலும் செலான் வங்கி அட்டைதாரர்கள் பல்வேறு சலுகைகளினூடாக அனுகூலம் பெறுகின்றனர். தினசரி கொள்வனவுகளின் போது நிதிசார் நிவாரணம் என்பது பொது மக்களுக்கு மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது. அதன் பிரகாரம், செலான் அட்டைதாரர்களுக்கு குறைந்த கையாளல் கட்டணமொன்றைச் செலுத்தி, தமது கொடுப்பனவை இலகுமுறை தவணைக் கொடுப்பனவுத் திட்டமாக மாற்றிக் கொள்ள முடியும். எனவே, இந்த நெருக்கடியான காலப்பகுதியில் செலான் கடனட்டை போன்ற அத்தியாவசியமான அட்டையொன்றைக் கொண்டிருப்பது மிகவும் கைகொடுப்பதாக அமைந்திருக்கும்.

கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்கள்

# ரூ. 5 மில்லியன் வெற்றி




கொமர்ஷல் வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட 'மில்லியனை வெல்லுங்கள்' என்ற பணம் அனுப்பும் ஊக்குவிப்புத் திட்டத்தின் அதிர்ஷ்ட வெற்றியாளர்களுக்கு ரூ. 5 மில்லியன் பணப் பரிசுகளை வங்கி அண்மையில் வழங்கியது.

இதில் நான்கு முதல் பரிசுகளை வென்றவர்களுக்கு தலா ரூ. 1 மில்லியன் மதிப்புள்ள காசோலைகளும் முதல் நான்கு மாதங்களில் வெற்றி பெற்ற மேலும் 40 பணம் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு தலா ரூ. 25,000 ஆறுதல் பரிசுகளும் அடங்கும். மேலும் இந்த ஊக்குவிப்பைத் தொடர திட்டமிட்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது. அத்தோடு வாடிக்கையாளர்களை வங்கியின் பணம் அனுப்பும் சேனல்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கிறார்கள்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இருந்து பணம் அனுப்பிய மொரட்டுவையைச் சேர்ந்த வை. சி. எஸ். பீரிஸ், கிரிபத்கொடையைச் சேர்ந்த ஏ. டி. மாலனி சோமலதா பெர்னாண்டோ, வென்னப்புவயைச் சேர்ந்த டபிள்ய'. சகுன் மதுரங்க தமேல், ஹொரணயைச் சேர்ந்த சிவகுமார் திலானி ஆகிய நான்கு பேரும் ரூ. 1 மில்லியன் பரிசுகளை வென்றவர்கள்.

'மில்லியனை வெல்லுங்கள்' என்ற ஊக்குவிப்பு, கொமர்ஷல் வங்கியின் RemitPlus மூலம் பணத்தைப் பெறுபவர்களுக்கு - வங்கியின் பணம் அனுப்பும் சேவை - மாதம் ஒருமுறை நடைபெறும் சீட்டிழுப்பில் தானாக நுழைவதற்கு உதவியது. ஜனவரி, ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் கொமர்ஷல் வங்கி கணக்கிற்கு நேரடியாகப் பணம் அனுப்பிய ஒவ்வொரு வாடிக்கையாளரும், அவர்களுக்கு நெருக்கமான கொமர்ஷல் வங்கிக் கிளையிலிருந்து அனுப்பப்பட்ட பணத்தைச் சேகரித்தவர்களும் இந்தக் குலுக்கல்களில் நுழையத் தகுதியுடையவர்கள். ஒவ்வொரு மாதத்தின் குலுக்கல் முடிவிற்குப் பிறகு, வங்கி அதன் சமூக ஊடக தளங்களிலும் வங்கியின் 'ரெமிட்பிளஸ்' செயலியிலும் வெற்றியாளர்களின் விவரங்களை வெளியிட்டது.

பணம் பெறுபவர்களை நேரடியாக வங்கி மற்றும் பணம் அனுப்பும் பங்காளர்களை அணுகவும், நேரடியாக பணம் அனுப்புவதை ஊக்குவிக்கவும், பயன்படுத்தப்படாத சந்தைகளை அடைய உதவவும், வாடிக்கையாளர் விசுவாசம் மற்றும் தக்கவைப்பை அதிகரிக்கவும், உலகளாவிய பங்காளிகளின் வாடிக்கையாளர்களை கவரவும், பிரபல்யப்படுத்தவும் 'மில்லியனை வெல்லுங்கள்' பிரசாரம் தொடங்கப்பட்டது. அதன் பணம் செலுத்தும் அட்டை, RemitPlus பயன்பாடு மற்றும் தொடர்புடைய மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள் உள்ளடங்குகின்றன.

ஹவாலா, உண்டியல் போன்ற முறைசாரா பணம் அனுப்பும் வழிகளில் இருந்து விலகி, வாடிக்கையாளர்களுக்கு கணிசமான ஊக்கத்தை அளிக்கும் வகையில் இந்த விளம்பரம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று வங்கி மேலும் கூறியுள்ளது. 'மில்லியனை வெல்லுங்கள்' ஆனது புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல், நிலம் வாங்குதல், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குதல் அல்லது தொழில் தொடங்குதல் போன்றவற்றின் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இதன் மூலம் அவர்கள் தாயகம் திரும்பும்போது அவர்களைத் தக்கவைக்கும் வகையிலான இத்திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பீஜிங்

# கொரோனா பரிசோதனை தீவிரம்

சீனாவில் 2019 ஆம் ஆண்டு டிசெம்பரில் தோன்றிய கொரோனா தொற்று இன்னும் முடிவுக்கு வராமல் தொடர்கதையாய் நீளுகிறது.

ஹாங்காங், மெக்காவ் மற்றும் பிற சீன நகரங்களில் கடுமையான கொரோனா கட்டுப்பாடுகள் அமலில் உள்ளன. இந்த நிலையில் தற்போது சீனாவின் ஷாங்காய், பீஜிங் நகரங்களில் புதிய பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

ஷாங்காய் நகரம் இப்போதுதான் கட்டுப்பாடுகளில் இருந்து மீண்டு இயல்பு நிலைக்கு திரும்பிய சூழலில், ஒரு முக்கிய சர்வதேச வணிக மையத்தில் உள்ள கரோக்கி பார்லரில் தொற்று வெடிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இது, ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடையே தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தத் தவறியமையை



வெளிப்படுத்தியுள்ளது.

இதுபோன்ற அனைத்து விற்பனை நிலையங்களும் வணிகத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பீஜிங்கிலும் இரவு விடுதி ஒன்றில் கொரோனா வெடிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்களை அடுத்து ஷாங்காயிலும் பீஜிங்கிலும் குறிப்பிட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு கொரோனா பரிசோதனை தீவிரமாக நடத்தப்படுகிறது.

ஐக்கிய அரபு அமீரகம்

## உயிரைப் பணயம் வைத்து 14 மணிநேர விமானப் பயணம்

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி, டுபாயில் இருந்து அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் விமான நிலையத்துக்கு அமீரகதின் ஏர்பஸ் 380 என்ற விமானம் பயணித்துள்ளது. சுமார் 14 மணி நேரம் நீடித்த இப்பயணத்திற்கு பின்னர், அவுஸ்திரேலியாவில் விமானம் தரையிறங்கிய நிலையில் அந்த விமானத்தின் பக்கவாட்டில் மிகப்பெரிய துளை இருப்பதைக் கண்டு பயணிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதனால் விமானத்தின் உள்ளே கடுமையான சத்தம் கேட்டதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து விமான நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், "விமானத்தின் ஒரு டயர் வெடித்ததால் விமானத்தின் வெளிப்புற பகுதி சேதமடைந்தது. இருப்பினும் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. இதில் பயணிகளுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. இதுபோன்ற நிகழ்வு 10 இலட்சங்களில் ஒருமுறை மாத்திரமே நடக்கும்" என்றார்.



நைஜீரியா

சிறைச்சாலை மீது பயங்கரவாதத் தாக்குதல்:

## 11 பேர் உயிரிழப்பு

### 850 க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோட்டம்

நைஜீரியாவின் தலைநகரான அபுஜாவில் உள்ள சிறைச்சாலையைக் குறிவைத்து நேற்று முன்தினம் (06) போகோ ஹராம் பயங்கரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டும், வெடிகுண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 850 க்கும் மேற்பட்ட கைதிகள் சிறைச்சாலையில் இருந்து



தப்பிச் சென்றுள்ளனர். அவர்களில் 300 பேரைப் பொலிஸார் மீண்டும் கைது செய்துள்ளனர். மேலும், தப்பிச் சென்றவர்களைப் பொலிஸார் தீவிரமாகத் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## பொம்மையால் கதறும் குடும்பம்

அமெரிக்காவைச் சேர்ந்த நபர் ஒருவர் தன்னுடைய பொம்மையால் தனக்கு அடிக்கடி நெஞ்சுவலி ஏற்படுவதாகக் கூறியுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமானுஷ்ய விடயங்கள் குறித்து ஆய்வு செய்துவருபவர் மைக் யார்க்.


இவர், 2016ஆம் ஆண்டு தனது குடும்பத்தினரின் எதிர்ப்பையும் மீறி, ஒன்லைனில் அமானுஷ்யம் நிறைந்த பொம்மை எனக் கூறப்படும் ஒரு பொம்மையை வாங்கியுள்ளார். அத்துடன், குறித்த பொம்மையை தனது ஆராய்ச்சிக்கு பயன்படுத்தி வந்துள்ளார். இந்நிலையில் ஒருமுறை அவரது கமெராவில் குறித்த பொம்மையை வீடியோ எடுத்தபோது, அது கண்சிமிட்டியதாக கூறும் மைக், அதைப்பற்றி அறிய 'ஸ்பிரிட் பொக்ஸ்'



பரிசோதனை செய்த போது தனது பெயர் ஜெனட் என அந்த பொம்மை சுட்டிக்காட்டியதாகவும் குறித்த பொம்மையால் பல சிரமங்களை சந்தித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக, அப் பொம்மையின் அருகே இருந்து பணிபுரியும்போது தனக்கு நெஞ்சு வலி ஏற்படுவதாகவும், தனது நண்பர்களுக்கும் இதேபோல சிக்கல்கள் ஏற்பட்டதாகவும் ஜேனடின் பின்புறம் '1903' என்று பொறிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே இப்பொம்மைக்கு 119 வயது ஆகிறது என்றும் மைக் யார்க் தெரிவித்தார்.

அமெரிக்கா

## சடலங்களை விற்று வந்த பெண்ணால் பரபரப்பு



அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் 45 வயதான மேகன் ஹெஸ் என்ற பெண்ணொருவர் இறுதிச் சடங்குகளை நடத்தும் இல்லம் ஒன்றை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் குறித்த இறுதிச் சடங்கு இல்லத்தில் இருந்து அண்மையில் அழுகிய நிலையில் 31 சடலங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

இந்நிலையில் இது குறித்து அப்பெண்ணிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த பெண் 'மனித சடலங்களை சேகரித்து, அவற்றில் இருக்கும் தங்கப் பற்களை சுமார் 40,000 டொலருக்கு விற்றுள்ளமை தெரிய வந்துள்ளது. அத்துடன் அச் சடலங்களை எரியூட்டுவதற்குப் பதிலாக, உடல் பாகங்களை தனித்தனியே பிரித்து மருத்துவ மாணவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா

## தாடியை எடுக்காததால் வேலையை இழந்த சீக்கியர்கள்

கனடாவின் ரொரன்றோ நகரில் பாதுகாவலர்களாக பணியாற்றுவோர் தாடி வைத்துக்கொள்ளக் கூடாது. முழுமையாக முகச்சவரம் செய்துகொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டதைத் அடுத்து, சீக்கிய பாதுகாவலர்கள் பல பேர் வேலை இழந்தனர். சீக்கியர்களுக்கு 'தாடியை மழிக்கக்கூடாது; முடிவெட்டக்கூடாது போன்ற மதரீதியான கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால், தாடி வைத்திருப்போர் N95 வகை முகக்கவசங்களை அணிவது கடினம் ஆகும். எனவே



தாடி வைத்திருப்பவர்கள் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு இணங்க N95 முகக்கவசங்களை அணிய முடியாது என்பதால் சீக்கியர்கள் பணிசெய்ய முடியாத ஒரு சூழல் ஏற்பட்டது. இதனால் தாடியை எடுக்காத பெரும்பாலான சீக்கியர்கள் வேலை இழந்தனர்.




இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# அவுஸ்திரேலியாவுக்கு ஈடு கொடுக்குமா இலங்கை?

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது காலியில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை படுதோல்வியைச் சந்தித்த நிலையில் தொடரைச் சமப்படுத்துவதற்கு மேம்பட்ட துடுப்பாட்டப் பெறுபேறுகளைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

பிரவீன் ஜெயவிக்கிரமவுக்கு மேலதிகமாக தனஞ்சய டி சில்வா, அசித பெர்ணாண்டோ, ஜெஃப்ரி வண்டர்சேயும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் டுனித் வெல்லலாகே, மகேஷ் தீக்‌ஷன ஆகியோர் டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதுடன், கசுன் ராஜிதவும் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரையில் மாற்றமெதுவும் இருக்காது என நம்பப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிரேஷ்ட வீரர்களான அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மற்றும் குசல் மெண்டிஸிடமிருந்து நீண்ட இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதேவேளை, இலங்கைக் குழாமில் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்ளாத பிரபாத் ஜெயசூரிய மற்றும் லக்‌ஷன் சந்தகான் ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.



## ஐந்தாமிடத்துக்கு முன்னேறினார் பண்ட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்துக்கு இந்தியாவின் றிஷப் பண்ட் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான ஐந்தாவது டெஸ்டில் 203 ஓட்டங்களைப் பெற்றதைத் தொடர்ந்தே 10ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை பண்ட் அடைந்துள்ளார்.

இதேவேளை, இதே டெஸ்டில் 220 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் ஜொனி பெயார்ஸ்டோ, 21ஆம் இடத்திலிருந்து 11 இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. மர்னுஸ் லபுஷைன், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. பாபர் அஸாம், 5. றிஷப் பண்ட், 6. கேன் வில்லியம்ஸன், 7. உஸ்மான் கவாஜா, 8. திமுத் கருணாரத்ன, 9. றோஹித் ஷர்மா, 10. ஜொனி பெயார்ஸ்டோ.

இதேவேளை குறித்த டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன், ஏழாம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தை அடைந்துள்ளார்.

மட்டக்களப்பில் அடுத்த மாதம்

## மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழா

■ க. விஜயரெத்தினம்

மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழாவானது அடுத்த மாதம் 20, 21ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் இந்த இக்கட்டான சூழ்நிலையில் மீண்டும் மாற்றுத்திறனாளிகளை பேசு பொருளாக்கும் நோக்கோடு இவ்விளையாட்டு விழா நடாத்தப்படவுள்ளது என தமிழ் மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழா தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்...

"டேட்டா சரிட்டி, மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் ஆகியன இணைந்து நடாத்தும் இந்த விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணத்தில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்து 1000க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்துகொள்ளும் இந்த விளையாட்டு விழாவுக்கு பிரதான அனுசரணையை அபி டயமன்ட், ராஜ் கிளஸ்டர் மற்றும் லிங்க்ஸ் லீகல் ஆகிய நிறுவனத்தினர் வழங்குகின்றனர்.

மட்டக்களப்பில் இருந்து 26 மாற்றுதிறனாளிகள் அமைப்புகளும், அம்பாறையில் இருந்து 8 மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்களும், திருகோணமலையில் இருந்து 4 மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்களும் இந்த விளையாட்டு விழாவில் கலந்து கொள்கின்றனர். தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் இந்த விளையாட்டு போட்டியின் முதல் அங்கமாக பார்வை இழந்தவர்களுக்கான சத்த பந்து கிரிக்கட் போட்டி இடம்பெறவுள்ளது. இந்த போட்டியில் மட்டக்களப்பை தளமாக கொண்டியங்கும் உதயம் விழிப்புலனிழந்தோர் சங்கத்தினரும்,யாழ் விழிப்புலனிழந்தோர் சங்கத்தினரும் பங்குபற்றுகின்றனர் .






மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடருக்கான

# இந்திய குழாமில் கில், சாம்ஸன்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்தியக் குழாமில் ஷுப்மன் கில், சஞ்சு சாம்ஸன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கில் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னரும், சாம்ஸன் ஓராண்டுக்குப் பின்னரும் ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

அணித்தலைவர் றோஹித் ஷர்மா, விராட் கோலி, ஜஸ்பிரிட் பும்ராஹ், றிஷப் பண்ட், ஹர்டிக் பாண்டியா, மொஹமட் ஷமி ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதுடன், லோகேஷ் ராகுல், தீபக் சஹர், குல்தீப் யாதவ், வொஷிங்டன் சுந்தர் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

அணித்தலைவராக ஷீகர் தவான் பெயரிடப்பட்டுள்ள நிலையில் உப அணித்தலைவராக இரவீந்திர ஜடேஜா பெயரிடப்பட்டுள்ளார்.

குழாம்: ஷீகர் தவான், ருத்துராஜ் கைகவாட், ஷுப்மன் கில், தீபக் ஹூடா, சூரியகுமார் யாதவ், ஷ்ரேயாஸ் ஐயர், இஷன் கிஷன், சஞ்சு சாம்ஸன், இரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாக்கூர், யுஸ்வேந்திர சஹால், அக்ஸர் பட்டேல், ஆவேஷ் கான், பிரசீத் கிருஷ்ணா, மொஹமட் சிராஜ், அர்ஷ்டீப் சிங்க்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 08 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.